# தமிழ்மொழி வாழ்த்து

வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ்மொழி
வாழிய வாழியவே!
வான மளந்த தனைத்தும் அளந்திடும்
வண்மொழி வாழியவே!

ஏழ்கடல் வைப்பினுந் தன்மணம் வீசி
இசைகொண்டு வாழியவே!
எங்கள் தமிழ்மொழி எங்கள் தமிழ்மொழி
என்றென்றும் வாழியவே!

சூழ்கலி நீங்கத் தமிழ்மொழி ஓங்கத்
துலங்குக வையகமே!
தொல்லை வினைதரு தொல்லையகன்று
சுடர்க தமிழ்நாடே!

வாழ்க தமிழ்மொழி வாழ்க தமிழ்மொழி
வாழ்க தமிழ்மொழியே!
வானம் அறிந்த தனைத்து மறிந்து
வளர்மொழி வாழியவே!

- மஹாகவி சுப்பிரமணிய பாரதியார்

2 - CM 28799 - 1500 (2018/12) இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களம்

# தமிழ்த்தாய் வாழ்த்து

நீராரும் கடலுடுத்த நிலமடந்தைக் கெழிலொழுகும்
சீராரும் வதனமெனத் திகழ்பரதக் கண்டமிதில்
தெக்கணமும் அதிற்சிறந்த திராவிடநல் திருநாடும்
தக்கசிறு பிறைநுதலும் தரித்தநறும் திலகமுமே
அத்திலக வாசனைபோல் அனைத்துலகும் இன்பமுற
எத்திசையும் புகழ்மணக்க இருந்தபெருந் தமிழணங்கே!

பல்லுயிரும் பலவுலகும் படைத்தளித்துத் துடைக்கினுமோர்
எல்லையறு பரம்பொருள்முன் இருந்தபடி இருப்பதுபோல்
கன்னடமுங் களிதெலுங்கும் கவின்மலையாளமும் துளுவும்
உன்னுதரத் தேயுதித்தே ஒன்றுபல வாகிடினும்
ஆரியம்போல் உலகவழக்கழிந் தொழிந்து சிதையாவுன்
சீரிளமைத் திறம்வியந்து செயன்மறந்து வாழ்த்துதுமே!

மனோன்மணீயம் தெ.பொ.மீனாட்சி சுந்தரம்பிள்ளை

අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
Ministry of Education

'ඉසුරුපාය', බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව.
'இசுருபாய', பத்தரமுல்ல, இலங்கை.
'Isurupaya', Battaramulla, Sri Lanka.
+94112785141-50 | +94112785818
info@moe.gov.lk | www.moe.gov.lk


මගේ යොමුව / எனது இல. / My Ref. ED/01/05/03/05/13

ඔබේ යොමුව / உமது இல. / Your Ref.

දිනය / திகதி / Date 2018/10/17

චක්‍රලේඛ අංක - 35/2018

සියලුම පළාත් අධ්‍යාපන ලේකම්වරුන්
සියලුම පළාත් අධ්‍යාපන අධ්‍යක්ෂවරුන්
සියලුම පළාත් විෂය සම්බන්ධීකරණ නිලධාරීන්
සියලුම කලාප අධ්‍යාපන අධ්‍යක්ෂවරුන්
සියලුම කොට්ඨාශ අධ්‍යාපන අධ්‍යක්ෂවරුන්
සියලුම කලාප විෂය සම්බන්ධීකරණ නිලධාරීන්
සියලුම විදුහල්පතිවරුන්
සියලුම දෙමළ විෂය ගුරු උපදේශකවරුන්

**සමස්ත ලංකා දෙමළ භාෂා දින තරගාවලිය : පාසල්, කලාප, පළාත් හා ජාතික මට්ටමේ වාර්ෂික තරගාවලිය පැවැත්වීම සඳහා වන චක්‍රලේඛ සංශෝධනය - 2019**

අධ්‍යාපන ලේකම්ගේ චක්‍රලේඛ අංක 33/2013 හා 2013/10/01 දිනැති දෙමළ භාෂාව හා සමස්ත ලංකා දෙමළ භාෂා දින තරගාවලියට අදාළ චක්‍රලේඛය 2019/01/01 දින සිට ක්‍රියාත්මක වන පරිදි මෙයින් සංශෝධනය කරමි. ඒ අනුව පාසල් මට්ටමේ සිට සියලුම මට්ටම් ආවරණය වන පරිදි සමස්ත ලංකා දෙමළ භාෂා දින තරගාවලිය, මෙම චක්‍රලේඛයේ සඳහන් විධි විධාන සමඟින් මෙයට අමුණා එවා ඇති අත් පොතෙහි සඳහන් විධි විධාන අනුව මෙම තරගාවලිය ප්‍රශස්ත අයුරින් සංවිධානය කොට ක්‍රියාත්මක කළ යුතුය.

2019 වර්ෂයේ ඉදිරි වසර 05 ක් සඳහා ක්‍රියාත්මක වීමට නියමිත මෙම චක්‍රලේඛ විධි විධාන උපදෙස් පළාත්, කලාප හා පාසල් මට්ටමින් නිසි පරිදි දැනුවත් කරමින් ඒ ඒ මට්ටමින් වාර්ෂිකව මෙම තරගාවලිය සංවිධානය කොට පැවැත්වීම අවශ්‍ය වේ. ඉන් අනතුරුව සමස්ත ලංකා මට්ටමේ හා ජාතික මට්ටමේ ජයග්‍රාහී සිසු සිසුවියන් තෝරා ගැනීමට අධ්‍යාපන අමාත්‍යාංශය විසින් කටයුතු කරන බව මෙයින් කාරුණිකව දන්වා සිටිමි.

සුනිල් හෙට්ටිආරච්චි
අධ්‍යාපන ලේකම්


ගරු අමාත්‍යතුමා / கௌரவ அமைச்சர் / Hon. Minister
+94112784832
+94112784825
minister.education@moe.gov.lk

ලේකම් / செயலாளர் / Secretary
+94112784811
+94112785162
secretary.education@moe.gov.lk

අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
Ministry of Education

'ඉසුරුපාය', බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව.
'இசுருபாய', பத்தரமுல்ல, இலங்கை.
'Isurupaya', Battaramulla, Sri Lanka.
+94112785141-50 +94112785818
info@moe.gov.lk www.moe.gov.lk


මගේ යොමුව / எனது இல. / My Ref. ED/01/05/13/05/13

ඔබේ යොමුව / உமது இல. / Your Ref.

දිනය / திகதி / Date 2018/10/ 21

சுற்று நிரூப இல :-35/2018

சகல மாகாணக் கல்விச் செயலாளர்

சகல மாகாணக் கல்விப் பணிப்பாளர்கள்

சகல மாகாணப் பாட இணைப்பாளர்கள்

சகல வலயக் கல்விப் பணிப்பாளர்கள்

சகல கோட்டக் கல்விப் பணிப்பாளர்கள்

சகல வலயப்பாட இணைப்பாளர்கள்

அதிபர்கள்

சகல தமிழ் மொழிப்பாட ஆசிரிய ஆலோசகர்கள்

**அகில இலங்கை தமிழ் மொழித் தினப் போட்டிகள்: பாடசாலை, வலய, மாகாண மற்றும் தேசிய மட்டத்தில் வருடாந்தம் நடாத்தப்படும் போட்டிகள் தொடர்பான சுற்று நிருப திருத்தம் - 2019**

கல்விச் செயலாளரின் 33/2013ம் இலக்கம் மற்றும் 2013.10.01ம் திகதிய தமிழ்மொழி மற்றும் இலக்கியத் தமிழ் மொழித் தினம் தொடர்பான சுற்றுநிருபம் 2019.01.01ம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளன. அதற்கமைய பாடசாலை தொடக்கம் சகல மட்டங்களுக்கும் பொருந்தும் வகையில் வருடாந்த தமிழ்மொழி தினப் போட்டிகள் இச் சுற்று நிருபத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விதிகளுடனும் இத்துடன் இணைத்து அனுப்பி வைக்கப்பட்டுள்ள கைநூலில் குறிப்பிடப்பட்டுள்ள விதிகளுக்கு அமைவாகவும், இப் போட்டிகளைச் சிறப்பான முறையில் ஒழுங்கு செய்து நடைமுறைப்படுத்த வேண்டும்.

2019ம் ஆண்டு முதல் எதிர்வரும் ஐந்து வருடங்களுக்கு நடைமுறையில் இருக்கும் இச் சுற்று நிருபத்தின் விதிமுறைகள் பாடசாலை, வலய, மற்றும் மாகாண மட்டங்களுக்கு உரிய முறையில் தெளிவுபடுத்தி அவ்வவ் மட்டங்களில் வருடந்தோறும் இப் போட்டிகளை ஏற்பாடு செய்து நடாத்துதல் வேண்டும். அதன் பின் அகில இலங்கை மற்றும் தேசியமட்டத்தில் வெற்றி பெறும் மாணவ மாணவியரை தெரிவு செய்து கொள்வதற்கான நடவடிக்கைகள் கல்வி அமைச்சின் மூலம் மேற்கொள்ளப்படல் வேண்டும் என்பதைத் தயவுடன் அறியத் தருகின்றேன்.

சுனில் ஹெட்டிஆரச்சி
செயலாளர்
கல்வி அமைச்சு


ගරු අමාත්‍යතුමා / கௌரவ அமைச்சர் / Hon. Minister
+94112784832
+94112784825
minister.education@moe.gov.lk

ලේකම් / செயலாளர் / Secretary
+94112784811
+94112785162
secretary.education@moe.gov.lk

අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
Ministry of Education

'ඉසුරුපාය', බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව.
'இசுருபாய', பத்தரமுல்ல, இலங்கை.
'Isurupaya', Battaramulla, Sri Lanka.
+94112785141-50 +94112785818
info@moe.gov.lk www.moe.gov.lk

මගේ යොමුව / எனது இல. / My Ref. ED/01/05/03/05/13

ඔබේ යොමුව / உமது இல. / Your Ref.

දිනය / திகதி / Date 2018/10/ 11

Circular No: 35/2018

All Provincial Secretaries of Education
All provincial Directors of Education
All Provincial Coordinating officers in charge of the Subject
All Zonal Directors of Education
All Divisional Directors of Education
All Zonal Coordinating officers in charge of the subject
All Principals
All Teacher Advisors in charge of the subject of Sinhala

**All Island Tamil Language day Competition: Revision of circular for the conduct of annual Competition in school, Zonal, Provincial, and National Levels – 2019**

The Circular of the Secretary of the ministry of Education bearing No. 33/2013 dated 01.10.2013 in relation to the All Island Tamil Language day Competition is revised here by with effect from 01.01.2019. Accordingly, the Tamil language day Competition Should be organized optimally and executed as per the provisions Stipulated in the manual annexed here with along with the Provisions stipulated in this circular covering all the levels from school level.

It is required to organize and conduct this Competition in each level by creating awareness on the provisions of this circular which is scheduled to be implemented for ensuing 05 years in Provincial, Zonal and school levels with effect from the year 2019. Subsequently, it is kindly informed that arrangements should be taken by the Ministry of Education for selecting the winners in the All Island and National Levels.

**Sunil Hettiarachchi**
**Secretary of the Ministry of Education.**

ගරු අමාත්‍යතුමා / கௌரவ அமைச்சர் / Hon. Minister
+94112784832
+94112784825
minister.education@moe.gov.lk

ලේකම් / செயலாளர் / Secretary
+94112784811
+94112785162
secretary.education@moe.gov.lk

சுற்று நிருபம் - 35/2018

எனது இல.: ஈடி 01/05/03/05/01
தமிழ்மொழிப்பிரிவு,
கல்வியமைச்சு,
இசுறுபாய,
பத்தரமுல்ல.
2018.10.11

மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர்களுக்கு,
மாகாணக் கல்விப் பணிப்பாளர்களுக்கு,
வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கு,
பாடசாலை அதிபர்களுக்கு,

# அகில இலங்கைத் தமிழ்மொழித்தினம் 2019 – 2023

## 1.0 நோக்கு :-

தமிழ்மொழியில் பல்தர ஆற்றலைப் பிரயோகத்தினூடே கற்று, செழுமையாக வெளிப்படுத்துதல்.

**பணிக்கூற்று**

1.1 தமிழ்மொழியைப் பிரயோக அடிப்படையில் பயன்படுத்தும் ஆற்றலைப் பெறுதல்.

1.2 தமிழ்மொழியினது செழுமையின் ஆழத்தை அறிந்துகொள்ளல்.

1.3 மொழியினூடாகத் தமிழ்க் கலைவடிவங்களை அறிந்து செயற்படுத்தல்.

1.4 தமிழ்மொழி ஊடாகத் தமது ஆளுமையை வளர்த்துச் செல்லுதல்.

1.5 தமிழ்மொழி கற்பதால் பயனுள்ள வகையில் பொழுதைக் கழிக்கலாம் என்பதை அறிதல்.

1.5 ஒருவரோடொருவர் இணைந்து வாழ்வதற்கு உதவுவதே மொழி என்பதை அனுபவத்தில் அறிந்து ஒழுகுதல்

## 2.0 சுற்றுநிருபத்தின் கால எல்லை :

இச்சுற்றுநிருபம் **2019 தொடக்கம் 2023** வரையிலும் செல்லு படியாகும் வண்ணம் நடைமுறையில் இருக்கும்.

## 3.0 போட்டி ஏற்பாட்டிற்கான ஆவணங்கள் :

இச்சுற்றுநிருபத்திற்கு மேலதிகமாக 2019 தொடக்கம் இணைப்பு ஒன்று வருடாந்தம் வெளியிடப்படும். சுற்று நிருபத்தில் **இணைப்பினைப் பார்க்கவும்** என்ற இடத்தில், குறித்த வருடத்திற்கான இணைப்பிற் குறிப்பிடப்பட்டிருப்பவற்றினையும் சேர்த்தே குறித்த வருடத்திற்கான போட்டிகளை ஏற்பாடு செய்து, நடத்துதல் வேண்டும்.

## 4.0 போட்டி நடைபெறும் மட்டங்கள் :

அகில இலங்கைத் தமிழ்மொழித்தினப் போட்டிகள் பாடசாலை மட்டம், கோட்ட மட்டம், வலய மட்டம், (மாவட்ட மட்டம் தேவைப்படின் மட்டும்) மாகாண மட்டம் ஆகிய நிலைகளிலும் நிறைவாகத் தேசிய மட்டத்திலும் நடைபெறுதல் வேண்டும்.

## 5.0 பாடசாலை மட்டப் போட்டிகள் :

5.1 சகல தமிழ்மொழிப் பாடசாலைகளிலும் தமிழ்மொழித்தினப் போட்டிகள் கட்டாயம்நடைபெறுதல் வேண்டும்.பெப்ரவரி 21 ஆந் திகதி சர்வதேச தாய்மொழித்தினம் நடத்தப்படுவதோடு, அத்தினத்தில் சகல பாடசாலைகளிலும் தமிழ்மொழித்தினப் போட்டிகள் நடத்தப்பட வேண்டும் என்பதைக் கவனத்தில் கொள்ளவும். இதற்கான ஏற்பாடுகளை மேற்படி பாடசாலை அதிபர்களே மேற்கொள்ளல் வேண்டும்.

5.2 குறிப்பிட்ட பிரிவிற்குரிய அனைத்து மாணவர்களும் போட்டி களில் ஈடுபடச் சந்தர்ப்பமும், ஊக்கமும் வழங்கப்பட வேண்டும். போட்டிகள் நடைபெறுவதற்கு குறைந்தது மூன்று வாரத்திற்கு முன்பு பாடசாலைகளில் காலைக்கூட்டத்தில் அறிவிக்கப்பட வேண்டும். சகல வகுப்பாசிரியர்களுக்கும் மாணவத் தலைவர்களுக்கும், எழுத்து மூலம் அறிவிப்புக் கொடுத்தல் வேண்டும். அறிவித்தற்பலகையிலும் வெளியிடுவதோடு, இதன் பிரதி குறிப்பிட்ட கோவையில் பேணப்படுதல் வேண்டும்.

5.3 பெப்ரவரி 28ஆந் திகதிக்கு முன்பதாக பாடசாலை மட்டப் போட்டிகளின் முடிவுகள் கோட்டக்கல்விப் பணிப்பாளருக்கூடாக வலயக் கல்விப் பணிப்பாளருக்கு/வலயத்தின் தமிழ்மொழிப் பிரிவிற்கு அனுப்பிவைக்கப்படல் வேண்டும். அனுப்பப்படாத விடத்து அப்பாடசாலையின் முடிவுகள் நிராகரிக்கப்படும்.

5.4 பாடசாலைமட்ட, வலயமட்ட, மாகாணமட்டப் பெறுபேறுகள் யாவும் பாடசாலைகளில் கட்டாயம் அறிக்கைப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும். இவ்வறிக்கைகள் பாடசாலை மதிப்பீட்டின் போது இணைப்பாடவிதான செயற்பாடுகளின் கீழ் கண்காணிக்கப்படும்.

5.5 தமிழ்மொழித்தின நிகழ்ச்சியானது கலைத்திட்டத்தின் இணைப் பாடவிதானச் செயற்பாடுகளில் ஒன்றாகும். பாடசாலை மட்டத்தில் மேற்படி போட்டி நிகழ்ச்சிகள் நடத்தப்படாத விடத்து இப்பாடவிதான செயற்பாடு பாதிக்கப்படுமாதலின், இப்போட்டிகளை நடத்தாத சம்பந்தப்பட்ட பாடசாலை அதிபரை அதற்கான சரியானவிளக்கம் அளிக்குமாறு வலயக்கல்விப் பணிப்பாளர் பணித்தல் வேண்டும்.

5.6 சகல பாடசாலை அதிபர்களும் தமது பாடசாலையில் நடை பெற்ற எழுத்தாக்கம், பேச்சு, வாசிப்பு தொடர்பான போட்டி களின் போது பாடசாலையின் அனைத்து மாணவர்களதும் உரிய வகுப்புகளிற்கான தேர்ச்சி மட்டத்தினை விடக் குறை வாக இருக்குமிடத்து, அம்மாணவர்கள் தொடர்பான அறிக்கை யினை வலயக் கல்விப் பணிப்பாளருக்கு அனுப்புதல் வேண்டும்.

5.7 வலயக் கல்விப் பணிப்பாளர் அதனை மாகாணக்கல்விப் பணிப்பாளருக்குச் சமர்ப்பித்தல் வேண்டும். இவ்வறிக்கைகளும் அதன் தொகுப்பும் உரிய முறையில் வலய, மாகாண திணைக்களங்களில் பேணப்படல் வேண்டும். இவ்வறிக்கையை அடிப்படையாகக் கொண்டு தேர்ச்சி மட்டத்தினை உயர்த்துவ தற்கான முன்னெடுப்புகளை எதிர்காலத்தில் மேற்கொள்ள முடியும். மாகாணமட்ட அறிக்கையின் தொகுப்பு கல்வி அமைச்சின் தமிழ்மொழிப் பிரிவின் கல்விப் பணிப்பாளருக்குக் **கட்டாயம்** அனுப்பிவைத்தல் வேண்டும்.

5.8 ஒவ்வொரு பாடசாலையிலும் தமிழ்மொழித்தினப் போட்டிகள் முறைப்படி நடைபெறுவது பற்றி வலயக் கல்விப் பணிப் பாளர்கள் உறுதிசெய்தல் வேண்டும். இதற்கான கண்காணிப் பாளர்களை வலய, மாகாண தமிழ்மொழித்தின ஏற்பாட்டா ளர்கள் நியமித்தல் வேண்டும். பாடசாலையிலும் தமிழ்மொழித் தினப்போட்டிகளின் பரிசளிப்பு விழாவை நடத்துவதற்கு அதிபர் பொறுப்பாக இருத்தல் வேண்டும். பரிசளிப்பு விழாவிற்கு இலக்கியவாதிகள், துறைசார்ந்த கலைஞர்கள் அழைக்கப்படல் வேண்டும்.

5.9 **எழுத்தாக்கப் போட்டிகளில் குறிப்பிட்ட பிரிவிற்குரிய சகல மாணவர்களும் பங்குபற்றச் சந்தர்ப்பம் கட்டாயம் வழங்குதல் வேண்டும். அவ்விதமே பாவோதலுக்குரிய பாடல்களைக் குறிப்பிட்ட பிரிவிற்குரிய சகல மாணவர்களும் மனனம் செய்வதற்குக் கொடுக்கப்படல் வேண்டும்.** இதன் மூலம் எல்லா மாணவர்களிடத்தும் தமிழ் இலக்கியத்திற் பரிச்சயம் ஏற்படச் சந்தர்ப்பம் உள்ளமையால் இத்தகைய மாணவர்க்கான வாய்ப்பினை இல்லாமற் செய்ய உடந்தையாக இருக்க வேண்டாம்.

5.10 பாடசாலைகளில் இல்ல ரீதியாகத் தமிழ்மொழித் தினப் போட்டிகள் நடாத்தப்பட்டு,விளையாட்டுப் போட்டி மற்றும் ஏனைய போட்டி முடிவுகளையும் சேர்த்தே பாடசாலையின் குறித்த இல்லங்களின் மொத்தப்புள்ளிகளைக் கணித்து, இல்லங்களின் இடங்கள் அறிவிக்கப்படல் வேண்டும்.

## 6.0 வலயமட்டப் போட்டிகள் :

6.1 பாடசாலைமட்டம், வலய மட்டம், மாகாண மட்டம், தேசிய மட்டம் ஆகிய நிலைகளில் தமிழ் மொழித்தினப்போட்டிகள் நடைபெறும். ஆயினும் பாடசாலைகளின் தொகை அதிகமாகக் காணப்படுமிடத்து இலகுபடுத்தும் முகமாக வலயமட்டத்துக்குள் கோட்ட மட்டரீதியிலும் போட்டிகளை நடத்துதல் வேண்டும். இதற்கான அனுமதியினை மாகாணக் கல்விப் பணிப்பாளருக்கு விண்ணப்பித்து அவரது அனுமதி பெறப்படல் வேண்டும்.

6.2 போட்டியாளர் பங்குபற்றும் போட்டிப்பிரிவிற்குரிய தரங்களில் தான் கல்வி கற்கின்றார்கள் என்பதை அதிபர் உறுதிப்படுத்த வேண்டும்.

6.3 போட்டிகள் நடைபெறும் திகதி பற்றி இரண்டு வாரங்களுக்கு முன்னராக மாகாணக் கல்விப் பணிப்பாளருக்கு அனுமதிக்கப் பட்ட நடுவர்களின் பெயர் விபரப் பட்டியலுடன் எழுத்து மூலம் அறிவிக்கப்படல் வேண்டும். **இவ்விதி கண்டிப்பாகப் பின்பற்றப்படல் வேண்டும்.**

## 7.0 மாகாண மட்டப் போட்டிகள் :

7.1 மாகாண மட்டத்துக்குட்பட்ட நிலையில் மாவட்ட அலகுகளாக அமைத்துப் போட்டிகளை நடாத்தும் அவசியம் ஏற்படின் அது குறித்துக் காரணங்காட்டி கல்வி அமைச்சின் செயலாளருக்கு விண்ணப்பித்து அனுமதியினைப் பெற்றபின்னரே மாவட்ட மட்டப்போட்டிகளுக்கான ஏற்பாடுகளைச் செய்தல் வேண்டும்.

7.2 மாகாணத்தின் கலை, கலாசாரத்தினை பிரதிபலிக்கும் வண்ணம் புதியபோட்டிகளை ஏற்பாடு செய்து மாகாண மட்டம் வரை நடாத்தி பரிசளிப்புச் செய்யலாம். (உ-ம். நாட்டுக்கூத்து, காமன்கூத்து போன்றவை.)

7.3 **போட்டிகள் நடைபெறும் திகதி பற்றி இரண்டு வாரங்களுக்கு முன்னராக மாகாணக் கல்விப் பணிப்பாளர் ஊடாக அனுமதிக்கப்பட்ட நடுவர்களின் பெயர் விபரப் பட்டியலுடன், கல்வி அமைச்சின் தமிழ்மொழிப் பிரிவிற்கு எழுத்து மூலம் அறிவித்து,அனுமதி பெற்றிருக்க வேண்டும். இவ்விதி கண்டிப்பாகப் பின்பற்றப்படல் வேண்டும்.**

## 8.0 போட்டியின் முக்கியத்துவம் :

8.1 வலய, மாகாண மட்டப் போட்டிகள் யாவும் சுற்றுநிருபத்திற்கு அமைவாகச் செவ்வனே நடைபெறுதலை உறுதிப்படுத்தும் பொறுப்பு, மாகாணக் கல்விப் பணிப்பாளர்களைச் சார்ந்ததாகும்.

8.2 மாகாண மட்ட, தேசிய மட்டப் போட்டிகளில் முதலாம், இரண்டாம், மூன்றாம் இடங்களைப் பெறுபவர்களுக்கு உயர் கல்விக்கான சந்தர்ப்பங்களில் சலுகைகளைப் பெறச் சந்தர்ப்பம் இருப்பதால் போட்டிகள் யாவும் சுற்றுநிருபத்திற்கும் இணைப்புக்கும் அமைவாக நெறிபிறழாது, நடத்தப்படுவதனை எவ்வகைச் சந்தேகத்திற்கும் இடமற்றவகையில் உறுதிப் படுத்தல் வேண்டும். மாகாணக் கல்விப் பணிப்பாளர்கள், மாகாணமட்டம், வலயமட்டம், கோட்ட மட்டம், பாடசாலை மட்டங்களில் தமிழ்மொழித் தினப் போட்டிகளையும், சான்றிதழ் வழங்கும் வைபவங்களையும் சிறப்பாக நடத்துதற்குரிய ஏற்பாடுகளை மேற்கொள்ளல் வேண்டும்.

8.3 சுற்றுநிருபத்தில், இணைப்பில் விதிக்கப்பட்டுள்ள ஒழுங்கு விதிகளுக்கு மாறாக, மாகாண நிலைக்குட்பட்ட எந்தவொரு மட்டத்திலும் போட்டிகள் நடைபெறாது இருப்பதைச் சம்பந்தப் பட்ட மாகாணக் கல்விப் பணிப்பாளர்கள் உறுதிசெய்தல் வேண்டும். போட்டிகள் யாவும் சுற்றுநிருபம், இணைப்பு ஒழுங்கு விதிகளைப் பின்பற்றி மாத்திரம் நடாத்தப்படல் வேண்டும்.

8.4 **போட்டிகள் பரீட்சைக்கு ஒப்பானவை. பரீட்சை நடைமுறை களை ஒத்ததாக இப்போட்டிகளின் நடை முறைகளும் எவ்வித கவனக் கலைப்பான்களுமற்ற சூழ்நிலைகளில் நடைபெற ஏற்பாடு செய்யவும். போட்டிகள் நடைபெறும் கட்டடங்களிற்குள் போட்டிகளுடன் தொடர்பற்றவர்கள் எக்காரணங் கொண்டும் அனுமதிக்கப்பட மாட்டார்கள். குறிப்பிட்ட போட்டியில் பங்கு பற்றும் போட்டியாளர்களும், உதவியாளர்களும் மாத்திரமே உள்ளே அனுமதிக்கப்படல் வேண்டும்.**

## 9.0 நடுவர்கள் :

9.1 அவ்வத்துறையில் போதிய **தராதரம், தகைமை, அனுபவம்** மற்றும் **நன்னெறி** உள்ளவர்களே நடுவர்களாக நியமிக்கப் படுதல் வேண்டும்.

9.2 தனிப் போட்டி நிகழ்ச்சிக்கு மூன்று நடுவர்களும், திறந்த அல்லது குழுப் போட்டி நிகழ்ச்சிகளுக்கு ஐந்து நடுவர்களும் நியமிக்கப்படல் வேண்டும்.

9.3 பாடசாலை மட்டப் போட்டிகளில் நடுவர் பட்டியல் கோட்டக் கல்விப் பணிப்பாளரால் அல்லது வலயக் கல்விப் பணிப்பாள ரால் அங்கீகரிக்கப்படுதல் வேண்டும்.

9.4 வலய மட்டப் போட்டிகளுக்கு நடுவர் பட்டியல் மாகாணக் கல்விப் பணிப்பாளரால் அங்கீகரிக்கப்படுதல் வேண்டும்.

9.5 மாகாண மட்டப் போட்டிக்கான நடுவர் பட்டியல் கல்வி அமைச்சின் தமிழ்மொழிப் பிரிவின் பொறுப்பாளரின் அங்கீகாரத்தினைப் பெற்றிருத்தல் வேண்டும்.

9.6 தேசிய மட்டப் போட்டிகளின் நடுவர் பட்டியல், கல்வி அமைச்சின் மேலதிகச் செயலாளரின் அங்கீகாரத்தினைப் பெற்றிருத்தல் வேண்டும்.

9.7 போட்டிகளில் கடமையாற்றும் நடுவர்கள் தாங்கள் அங்கீகரிக்கப் பட்டவர்களே என்பதை அடையாளம் காண்பிப்பதற்கு உத்தியோக பூர்வ இலச்சினையை அணிந்திருத்தல் வேண்டும்.

**9.8 போட்டி முடிவுகளுடன் ஒவ்வொரு போட்டிக்கும் மத்தியஸ்தம் வகித்த நடுவர்களின் பெயர், அவர்களது கல்வித்தகைமை, துறைசார் தகைமை, முகவரி ஆகியன உரிய அதிகாரியால் உறுதிப்படுத்தப்பட்டு உரிய மட்டத்திற்கான போட்டி முடிவு களுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். இல்லாத விடத்து இறுதிப்பெறுபேற்றினை நிராகரித்தல் வேண்டும். இது பாடசாலை மட்டத்திலிருந்து அனைத்து மட்டங்களிற்கும் பொருந்தும்.**

## 10.0 போட்டிகளைக் கண்காணித்தலும் இறுதி முடிவெடுத்தலும்:

10.1 பாடசாலை மட்டப் போட்டிகளின் ஒழுங்குகளில் பாடசாலை அதிபரின் முடிவே இறுதியானதாக இருத்தல் வேண்டும்.

10.2 வலயமட்டப் போட்டிகளின் ஒழுங்குகளில் வலயக்கல்விப் பணிப்பாளரின் முடிவே இறுதியானதாக இருத்தல் வேண்டும்.

10.3 மாகாணமட்டப் போட்டிகளின் ஒழுங்குகளில் மாகாணக் கல்விப் பணிப்பாளரின் முடிவே இறுதியானதாக இருத்தல் வேண்டும்.

10.4 தேசியமட்டப் போட்டிகளின் ஒழுங்குகளில் கல்வி அமைச்சின் தமிழ்மொழிப் பணிப்பாளரின் முடிவே இறுதியானதாக இருத்தல் வேண்டும்.

**10.5 சகல மட்டப் போட்டிகளையும் மேற்பார்வை செய்வதுடன், தேவையான ஆலோசனைகளையும், வழிகாட்டல்களையும் வழங்கக்கூடிய அதிகாரத்தைக் கல்வி அமைச்சின் தமிழ் மொழிப் பிரிவே கொண்டிருக்கும்.**

## 11.0 மதிப்பீடு :

11.1 நடுவர்களாகக் கடமையாற்றுபவர்கள், போட்டி ஆரம்பிக்கப் படுவதற்கு முன்னர் தம்முள் கலந்து ஆலோசிக்கலாம். புள்ளி வழங்கும் பணியானது நடுவர்களால் நிதானமாகவும், பதற்றம் இன்றியும் மேற்கொள்ளப்படல் வேண்டும். போட்டி ஆரம்பித்த பின்னர் தங்களுக்கிடையிலோ அல்லது வேறொருவருடனோ நடுவர்கள் எவ்வித தொடர்புகளையும் வைத்திருக்கக் கூடாது. **கையடக்கத்தொலைபேசிப் பாவனையை முற்றாக நிறுத்தி இணைப்பாளரிடம் கையளித்த பின்பே, போட்டி நடைபெறும் இடத்திற்குச் செல்ல வேண்டும்.**

11.2 நடுவர்கள் தரப்பட்ட புள்ளி விபரத்தாளில் உரிய புள்ளிகளை இட்டு, மொத்தப்புள்ளிகளையும், நிலைகளையும் குறிப்பிட்டு, தத்தமது பெயரை எழுதி ஒப்பமிட்ட பின்னர், தனித் தனியான இரகசிய உறையில் அதனை இட்டு, ஒட்டி, **அதன் மேல் ஒப்பமும் திகதியும் இட்டு,** போட்டி இணைப்பாளரிடம் ஒப்படைத்தல் வேண்டும்.

11.3 புள்ளி விபரத்தாளில் ஒருமுறை இடப்பட்ட புள்ளிகளை மாற்றம் செய்வது தவிர்க்கப்படல் வேண்டும். புள்ளிகளின் மேல் மீண்டும் மீண்டும் அழுத்தி எழுதுவது தவறு செய்த தாகவே, பிரதம பதிவாளரால் கருதப்பட்டு, நடுவர் பட்டியலி லிருந்து குறித்த நடுவரின் பெயர் நீக்கப்படல் வேண்டும். தேவைப்பட்டால் தவறுதலாகப் பதிந்த புள்ளியைப் பேனா வினால் **வெட்டிவிட்டு, சிற்றொப்பமிட்டு, சரியான புள்ளியைப் பதிதல்** வேண்டும்.

11.4 நடுவர்களினால் தனித்தனியாக ஒப்படைக்கப்பட்ட புள்ளி விபரத்தாள் அடங்கிய இரகசிய உறையினைப் போட்டி இணைப்பாளர் சேகரித்து, போட்டி நடைபெறும் அலுவல கத்தில் உள்ள பிரதம பதிவாளரிடம் ஒப்படைத்தல் வேண்டும்.

11.5 பிரதம பதிவாளர் ஏனைய உதவிப் பதிவாளர்களுடன் புள்ளி விபரத்தாளில் நடுவர்களால் இடப்பட்ட புள்ளிகளையும், நிலைகளையும் சரிபார்த்து, கணித்து இறுதி நிலையினைப் பதிவு செய்தல் வேண்டும்.

11.6 இறுதிப் போட்டிப் பொறுப்பாளரின் அங்கீகாரத்துடன் பெறுபேறுகள் வெளியிடப்படும். நடுவர் எவரேனும் தவறுதலாகப் புள்ளிகளைப் பதிந்திருப்பதாகக் காணப்படின் அந்நடுவர் காரியாலயத்திற்கு அழைக்கப்பட்டு அவர் முன்னிலையில் அப்புள்ளிகள் திருத்தப்படல் வேண்டும். இது பற்றி வெளியாள் எவருக்கும் அபிப்பிராயம் தெரிவித்தல் கூடாது. போட்டி அமைப்பாளர்கள் நடுவர்கட்கு இவ்வொழுங்குகளை வலியுறுத்துவதுடன் செயற்பாடுகளை நெறிப்படுத்திக் கண்காணித்தல் வேண்டும்.

## 12.0 முறைப்பாடுகள் :

12.1 **போட்டிகள் சம்பந்தமாக பெற்றோர், மற்றோர், அரசியல் வாதிகள் போன்றவர்களின் தலையீடுகள், முறைப்பாடுகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.**

12.2 நடைபெற்ற போட்டி ஒன்றோ பலவோ சுற்றுநிருபத்திற்கோ, இணைப்பிற்கோ முரணாக இருந்தால் அல்லது போட்டி நடைமுறை ஒழுங்கிலே ஏதாவது பிரச்சினைகள் காணப்படின்,

12.2.1 பாடசாலை மட்டப் போட்டிகளின் போது, குறித்த போட்டிக்குரிய மாணவர்களுக்குப் பொறுப்பாக உள்ள ஆசிரியரும்

12.2.2 கோட்டமட்டப் போட்டிகளின் போது, குறித்த பாடசாலை அதிபர் அல்லது பொறுப்பாசிரியரும்

12.2.3 வலய மட்டப் போட்டிகளின் போது, கோட்டக்கல்வி அதிகாரி அல்லது குறித்த பாடசாலை அதிபரும்

12.2.4 மாகாண மட்டப் போட்டிகளின் போது, வலயக்கல்விப் பணிப்பாளர் அல்லது வலயப் போட்டி இணைப்பாளரும்

12.2.5 தேசியமட்டப் போட்டிகளின் போது, மாகாணக் கல்விப் பணிப்பாளர் அல்லது மாகாணப் போட்டி இணைப்பாளர் ஆகியோரில் ஒருவரால்,

போட்டி முடிவுகள் அறிவிக்கப்படுவதற்கு முன்னதாக அவ்வப் போட்டி நடைபெறும் அலுவலகத்தில் உள்ள பிரதம பதிவாளரிடம் தமது முறைப்பாட்டினை எழுத்துமூலம், தகுந்த ஆதாரங்களுடன் ஒப்படைத்தல் வேண்டும்.

**12.3 போட்டிகளில் நடுவர்களின் தீர்ப்பே இறுதியானதாகும். நடுவர்களின் தீர்ப்புகளுக்கு மேலாக மேன்முறையீடு களுக்கு இடமில்லை. இருப்பினும், போட்டி நடைமுறை ஒழுங்கிலே பிரச்சினைகள் ஏதாவது இருப்பின் மட்டுமே மாற்றத்துக்கு உட்படுத்தலாம்.**

## 13.0 போட்டியாளர் தகைமைகள் :

13.1 குறித்த வருடத்திற்கான போட்டியில் பங்குபற்றுபவர் அவ்வருடம் பாடசாலையில் கல்வி பயிலும் மாணவராக இருத்தல் வேண்டும். (உ–ம்: 2019 ஆம் வருடப் போட்டிகளில் 2019 இல் கல்வி பயில்பவர் மட்டும்)

13.2 பாடசாலை மட்டம் முதல் தேசியமட்டம் வரை ஒரு போட்டியாளர் ஒரு பாடசாலை சார்பாகவே பங்குபற்றுதல் வேண்டும். ஒரு பாடசாலை சார்பாகப் போட்டியிட்டுத் தெரிவு செய்யப்பட்ட ஒரு போட்டியாளர் பின்னர் வேறொரு பாடசாலையில் கல்வி பயின்றால், அப்போட்டியாளர் போட்டிகளில் பங்குபற்றும் வாய்ப்பை இழந்து விடுவார்.

13.3 விதிக்கப்பட்ட தரங்கள், பிரிவுகளுக்கு அமைவாகவே பங்கு பற்றுதல் வேண்டும்.

13.4 முன்னைய வருடத்து டிசம்பர் மாதம் முதற் தடவையாகக் க.பொ.த. சாதாரண தரப்பரீட்சைக்குத் தோற்றிய ஒருவர் அடுத்த வருடம் மேற்படி பரீட்சைப் பெறுபேறுகள் கிடைக்கப் பெற்று, அதன் அடிப்படையில் க.பொ.த. உயர்தர வகுப்பின் தரம் 12க்கு முறைப்படி சேர்த்துக் கொள்ளப்படும் வரை, அவர் க.பொ.த. சாதாரண தரத்தில் தரம் 11க்கு உரிய வராகவே கணிக்கப்படுவர். அதன் அடிப்படையில் க.பொ.த (உ/த) வகுப்பின் தரம் 12க்கு முறைப்படி சேர்த்துக்கொள்ளப் பட்டாலும், அவர் க.பொ.த சாதாரண தரத்தில் தரம் 11 க்கு உரியவராகவே அவ்வருடத்தில் போட்டியை நிறைவு செய்தல் வேண்டும்.

13.5 தரம் 13ல் (க.பொ.த உ/த) ஒருமுறை பரீட்சைக்குத் தோற்றிய மாணவர், அடுத்த வருடம் இடம்பெறும் எந்தவொரு போட்டியிலும் பங்குபற்ற முடியாது.

13.6 போட்டியாளர் ஒவ்வொருவரும் தமது அடையாளத்தை நிரூபிக்கும் வகையில் தேசிய அடையாள அட்டையை அல்லது அஞ்சல் அறிமுக அட்டையை அல்லது பாடசாலை அதிபர், வலயக் கல்விப் பணிப்பாளர் ஆகிய இருவராலும் அத்தாட்சிப்படுத்தப்பட்ட போட்டியாளரின் நிழற்படம் ஒன்றினை ஒவ்வொரு மேனிலைப் போட்டியிலும் சமர்ப்பித்தல் வேண்டும்.

## 14.0 கலந்து கொள்ளும் போட்டிகளின் வரையறை :

**" சகல மாணவர்களுக்கும் சந்தர்ப்பம் வழங்கும் வகையில், கீழ்வரும் விதிகளுக்கமையப் போட்டிகள் நடாத்தப்படல் வேண்டும்."**

14.1 ஒரு போட்டியாளர் குறிப்பிட்ட ஒரு பிரிவிற்குரிய தனிப் போட்டி ஒன்றிலும், திறந்தபோட்டி அல்லது குழுப்போட்டி ஒன்றிலுமாக **இரு போட்டிகளில் மாத்திரம்** கலந்து கொள்ளலாம்.

14.2 ஒரு போட்டியாளர் தனிப்போட்டி ஒன்றில் ஒரு பிரிவிலிருந்து ஒரு போட்டி இலக்கத்தில் ஒருமுறை மாத்திரம் பங்குபற்றுவதற்கு அனுமதிக்கப்படுவார். ஆயினும் அடுத்த வருடம் அதே பிரிவில் வேறொரு போட்டி இலக்கத்தில் பங்குபற்ற முடியும். அதே போட்டி இலக்கத்தில் மீண்டும் பங்குபற்றியுள்ளார் என்று ஆவணங்கள் மூலம், ஆதாரத்துடன் நிரூபிக்கப்படின், குறித்த போட்டியாளர் அப்போட்டியிலிருந்து நீக்கப்படுவார். **இவ்விதி கோட்ட, வலய, மாகாண மற்றும் தேசிய மட்டப் போட்டிகளின் போது கண்டிப்பாகப் பேணப்படும்.**

14.3 திறந்த அல்லது குழுப் போட்டி ஒன்றில் ஒருமுறை பங்குபற்றி தேசிய மட்டத்தில் முதலாம், இரண்டாம், மூன்றாம் இடங்களில் ஏதாவது ஒன்றைப் **பெற்றிருந்தால்** அக்குழு அல்லது அக்குழு வில் இடம்பெற்ற போட்டியாளர் ஒருவர் அடுத்த வருடம் நடைபெறும் போட்டியில் பங்குபற்றுவதற்கு அனுமதியில்லை. அக்குழு அல்லது அக்குழுவில் இடம்பெற்ற போட்டியாளர் ஒருவர், ஒரு வருடத்தடையின் பின் பங்குபற்ற முடியும். **இவ்விதி தேசிய மட்டப் போட்டியின் போது கண்டிப்பாகப் பேணப்படும்.**

14.4 இருபத்தைந்து (25) போட்டிகளில் மாத்திரம் ஒரு பாடசாலை பங்குபற்றலாம். இவ் இருபத்தைந்து (25) போட்டிகளுக்குள் ஆரம்ப பாடசாலைகள் தவிர்ந்த ஏனைய சகல பாடசாலைகளும் போட்டி இலக்கம் பதினைந்து (15) தமிழறிவு வினாவிடை – எழுத்துப் போட்டியைக் **கட்டாயம்** தெரிவு செய்தல் வேண்டும்.

14.5 பாடசாலை மட்டத்திலிருந்து தேசிய மட்டம் வரை தனிப் போட்டி ஒன்றில் குறித்த ஒரு போட்டியாளரே கலந்து கொள்ள வேண்டும். திறந்த அல்லது குழுப் போட்டிகளுக்கு மாத்திரம் தவிர்க்க முடியாத சந்தர்ப்பத்தில் தகுந்த ஆதாரத்தின் மூலம் நிரூபிக்கும் பட்சத்தில் வலய அல்லது மாகாணக் கல்விப் பணிப்பாளர் வேறொரு போட்டியாளரை அனுமதிக்கலாம். இது **கோட்ட, வலய, மாகாண மற்றும் தேசிய மட்டப்** போட்டி களுக்கும் பொருந்துவதாக இருத்தல் வேண்டும்.

## 15.0 மேனிலை மட்டப் போட்டிகள் :

15.1 முன்னிலை மட்டங்களில் முதலாம் இடத்தைப் பெற்ற போட்டி களும், போட்டியாளர்களும் மட்டுமே மேனிலை மட்டப் போட்டிகளில் பங்குபற்ற முடியும்.

15.2 போட்டி ஒன்றில் முதலாமிடத்தில் இருவர் அல்லது இரு குழுக்கள் தெரிவு செய்யப்பட்டிருப்பின் அவ்விருவரும் அல்லது இரு குழுக்களும் வேறொரு நடுவர் குழுவின் தேர்வுக்கு விடப்பட்டு முதலாம் இடத்திற்கான ஒரு தீர்வு பெறப்பட்டு, அவர் அல்லது அக்குழு மேனிலைப் போட்டிக்கு அனுப்பப்படல் வேண்டும்.

15.3 யாதாயினும் போட்டி ஒன்றில் முதலாம், இரண்டாம், மூன்றாம் இடங்களில் ஒன்றைப் பெற்றுக்கொண்ட குழு அல்லது போட்டியாளர் ஒருவர், சுற்றுநிருப விதிமுறைகளுக்கு முரணாக போட்டிகளில் பங்குபற்றியிருந்தமை ஆவணங்கள் மூலம் நிரூபிக்கப்பட்டு, அவர் பெற்றுக்கொண்ட இடம் தகுதி நீக்கம் செய்யப்படின், அடுத்தடுத்த நிலையில் இடங்களைப் பெற்றுக்கொண்ட குழுக்கள் அல்லது போட்டியாளர்களின் இடங்களும் மாற்றியமைக்கப்பட்டு,மேனிலைப் போட்டிகளில் பங்குபற்றுவதற்குரிய தகுதி தீர்மானிக்கப்படும்.

## 16.0 விண்ணப்பப் படிவம் :

16.1 வலய, மாகாண, தேசிய நிலைப் போட்டிகளுக்கு அனுப்பப் படும் விண்ணப்பப் படிவங்களில் போட்டி இலக்கம், பிரிவு, போட்டிகளின் பெயர், தே.அ.அட்டை இலக்கம் அல்லது அஞ்சல் அறிமுக அட்டை இலக்கம், புகைப்படமாயின் புகைப்படம் என எழுதவும், ஒப்பம், பாடசாலையின் பெயர், முகவரி, கலந்துகொள்ளும் போட்டியாளர் தொகை, பாடசாலையின் தொலைபேசி இலக்கம், கையடக்கத் தொலை பேசி இலக்கம், குறித்த போட்டிகளுக்கான பொறுப்பாசிரியரின் பெயர், தொலைபேசி இலக்கம் என்பன கட்டாயம் குறிப்பிடப் பட்டு இருத்தல் வேண்டும். சுற்று நிருப இணைப்பிலுள்ள மாதிரிப் படிவம் பயன்படுத்தப்படல் வேண்டும்.

16.2 சான்றிதழ்களில் பெயர் சரியாக இடம்பெறல் வேண்டும் என்பதால் பெயர்களின் முன் **செல்வன்** அல்லது **செல்வி** என்ற விபரம் குறிப்பிடப்பட்டு,**முழுப்பெயர்** தமிழில் தெளிவாக எழுதப்பட்டிருத்தல் வேண்டும்.

16.3 **விண்ணப்பப் படிவத்தில் தரப்பட்ட விபரங்கள் யாவும் சரியானவை என உறுதிப்படுத்தி, அவற்றை உரிய இடத்திற்கு குறித்த திகதிக்கு முன்னராக அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.**

16.4 போட்டிகளில் கலந்துகொள்ளும் போட்டியாளர்களுக்கு மாத்திரமே சான்றிழ்கள் வழங்கப்படும். அணிசேர் கலைஞர்களுக்கும், உதவியாளர்களுக்கும் சான்றிதழ்கள் வழங்கப்படமாட்டாது.

16.5 விண்ணப்பப்படிவத்துடன் நாட்டிய நாடகம், இலக்கிய நாடகம், வில்லுப்பாட்டு, முஸ்லிம் நிகழ்ச்சி ஆகிய போட்டி நிகழ்ச்சிகளுக் கான பிரதிகள், சுய ஆக்கம் என்பதனை அதிபரால் உறுதிப் படுத்தி வலயக்கல்விப் பணிப்பாளர், மாகாணக் கல்விப் பணிப் பாளர் ஆகியோரின் சிபாரிசுடன் தேசிய மட்டப் போட்டிகளுக்கு அனுப்பப்படுதல் வேண்டும். நாட்டார் பாடல் சுய ஆக்கம் அல்ல என்பதால் பிரதி மட்டும் அனுமதி பெறப்படல் வேண்டும்.

16.6 தேசிய மட்டப் போட்டிகளில் பங்குபற்ற முன்னர் குழு நடனம், குழு இசை, நாட்டிய நாடகம், நாட்டார் பாடல், இலக்கிய நாடகம், வில்லுப்பாட்டு, முஸ்லிம் நிகழ்ச்சி ஆகியன வேறு நிகழ்ச்சி களில் மேடையேற்ற முடியாது. அவ்வாறு பங்குபற்றியிருப்பது ஆதாரத்துடன் நிரூபிக்கப்படுமிடத்து அப்போட்டி நிகழ்ச்சிக்கு வழங்கப்பட்ட நிலை மீளப்பெறப்பட்டு அடுத்ததாக வந்த போட்டிக் குழுவுக்கு அந்நிலை வழங்கப்படும்.

## 17.0 போட்டி இலக்கமும் போட்டியின் பெயர்களும்

| போ. இல. | பிரிவு | தரம் | தொகை | போட்டியின் பெயர் |
|---|---|---|---|---|
| 01 | 01 | 04,05 | ஒருவர் | ஆக்கம் எழுத்து |
| 02 | 02 | 06,07 | ஒருவர் | கட்டுரை வரைதல் |
| 03 | 03 | 08,09 | ஒருவர் | கட்டுரை வரைதல் |
| 04 | 04 | 10,11 | ஒருவர் | கட்டுரை வரைதல், இலக்கியம் நயத்தல் |
| 05 | 05 | 12,13 | ஒருவர் | தமிழியற் கட்டுரை வரைதல், இலக்கியம் நயத்தல் |
| 06 | 04 | 10,11 | ஒருவர் | இலக்கணப் போட்டி |
| 07 | 05 | 12,13 | ஒருவர் | இலக்கணப் போட்டி |
| 08 | 05 | 12,13 | ஒருவர் | திறனாய்வுப் போட்டி |
| 09 | 04 | 10,11 | ஒருவர் | குறுநாடக ஆக்கம் |
| 10 | 05 | 12,13 | ஒருவர் | குறுநாடக ஆக்கம் |
| 11 | 04 | 10,11 | ஒருவர் | கவிதை ஆக்கம் |
| 12 | 05 | 12,13 | ஒருவர் | கவிதை ஆக்கம் |
| 13 | 04 | 10,11 | ஒருவர் | சிறுகதை ஆக்கம் |
| 14 | 05 | 12,13 | ஒருவர் | சிறுகதை ஆக்கம் |
| 15 | குழு 1 | 6,7,8 | ஐந்து | தமிழறிவு வினா விடை - எழுத்து |
| 16 | 01 | 04,05 | ஒருவர் | வாசிப்பு |
| 17 | 02 | 06,07 | ஒருவர் | வாசிப்பு |
| 18 | 03 | 08,09 | ஒருவர் | வாசிப்பு |
| 19 | 01 | 04,05 | ஒருவர் | ஆக்கத்திறன் வெளிப்பாடு |
| 20 | 01 | 04,05 | ஒருவர் | பேச்சு |
| 21 | 02 | 06,07 | ஒருவர் | பேச்சு |
| 22 | 03 | 08,09 | ஒருவர் | பேச்சு |

| போ. இல. | பிரிவு | தரம் | தொகை | போட்டியின் பெயர் |
|---|---|---|---|---|
| 23 | 04 | 10,11 | ஒருவர் | பேச்சு |
| 24 | 05 | 12,13 | ஒருவர் | பேச்சு |
| 25 | 01 | 04,05 | ஒருவர் | பாவோதல் |
| 26 | 02 | 06,07 | ஒருவர் | பாவோதல் |
| 27 | 03 | 08,09 | ஒருவர் | பாவோதல் |
| 28 | 04 | 10,11 | ஒருவர் | பாவோதல் |
| 29 | 05 | 12,13 | ஒருவர் | இலக்கிய விமர்சனம் |
| 30 | 04 | 10, 11 | ஒருவர் | தனிநடிப்பு |
| 31 | 05 | 12, 13 | ஒருவர் | அறிவிப்பாளர் |
| 32 | 01 | 04,05 | ஒருவர் | இசையும் அசைவும் |
| 33 | 02 | 06,07 | ஒருவர் | இசை - தனி |
| 34 | 03 | 08,09 | ஒருவர் | இசை - தனி |
| 35 | 04 | 10.11 | ஒருவர் | இசை - தனி |
| 36 | 05 | 12,13 | ஒருவர் | இசை - தனி |
| 37 | குழு - 1 | 6,7,8,9 | 08-10 | இசை - குழு - 1 |
| 38 | குழு - 11 | 10,11,12,13 | 08-10 | இசை - குழு - 11 |
| 39 | 02 | 06,07 | ஒருவர் | நடனம் - தனி |
| 40 | 03 | 08,09 | ஒருவர் | நடனம் - தனி |
| 41 | 04 | 10,11 | ஒருவர் | நடனம் - தனி |
| 42 | 05 | 12,13 | ஒருவர் | நடனம் - தனி |
| 43 | குழு 1 | 4,5,6,7,8,9 | 09-12 | நடனம் - குழு - 1 |
| 44 | தி.போ | - | 09-12 | நாட்டிய நாடகம் (ஆடற்கதை) |
| 45 | தி.போ | - | 02-06 | நாட்டார் பாடல் |
| 46 | தி.போ | - | 09-12 | இலக்கிய நாடகம் |
| 47 | தி.போ | - | 07 | வில்லுப்பாட்டு |
| 48 | தி.போ | - | 03 | விவாதம் |
| 49 | தி.போ | - | 05 | தமிழறிவு வினாவிடை (வாய்மொழி) |
| 50 | தி.போ | - | 06-08 | முஸ்லிம் நிகழ்ச்சி |

## 18.0 போட்டிப் பிரிவுகள் :

| தோ. இல. | போட்டிப் பிரிவுகள் | தரங்கள் |
|---|---|---|
| 1 | முதலாம் பிரிவு | 04, 05 |
| 2 | இரண்டாம் பிரிவு | 06, 07 |
| 3 | மூன்றாம் பிரிவு | 08, 09 |
| 4 | நான்காம் பிரிவு | 10, 11 |
| 5 | ஐந்தாம் பிரிவு | 12, 13 |
| 6 | இசை குழு - 1 | 06, 07, 08, 09 |
| 7 | இசை குழு - 11 | 10, 11, 12, 13 |
| 8 | நடனம் குழு - 1 | 4, 5, 6, 7, 8, 9 |
| 9 | தமிழறிவு வினாவிடை (எழுத்து) | 6, 7, 8 மட்டும் |
| 10 | திறந்த போட்டிகள் | கட்டுப்பாடில்லை |

## 19.0 போட்டி இல : 01 ஆக்கம் - எழுத்து.

**முதலாம் பிரிவு – தரங்கள் 04, 05**

1. **விடயம் :**

புதிய கல்விச்சீர்திருத்த மறுசீரமைப்புக் கொள்கைக்கு இயைவாகப் பிள்ளைகள் சுதந்திரமாகச் சிந்திப்பதற்கும், வெளிப்படுத்துவதற்கும், ஆக்குவதற்கும், ஆர்வத்துடன் ஈடுபாடு கொள்வதற்கும் சந்தர்ப்பங்கள் திட்டமிட்டு அளிக்கப்படல் வேண்டும். இதற்கியைபாகப் போட்டி நடைபெறும் இடத்தில் தரப்படும் பொருத்தமான ஐந்து தலைப்புக்களுள் போட்டியாளர் ஒன்றைத் தெரிவு செய்து, அதுபற்றிப் பதினைந்து வாக்கியங்களை எழுதுதல் வேண்டும்.

- ஒவ்வொரு வாக்கியமும் ஐந்து சொற்களுக்குக் குறையாமல் இருத்தல் வேண்டும்.
- பதினைந்து வாக்கியங்கள் கொண்ட ஆக்கங்கள் மாத்திரம் மதிப்பீட்டுக்கு உட்படுத்தப்படும்.

2. **நேரம்** : 01 மணித்தியாலம்.

3. புள்ளித்திட்டம் : 100 புள்ளிகள்

| இல. | விடயம் | புள்ளி |
|---|---|---|
| i | தலைப்பும் பொருளும் | 20 |
| ii | கருத்தொழுங்கு | 20 |
| iii | பிழையின்மை | 20 |
| iv | நிறுத்தக்குறிகள் | 10 |
| v | உறுப்பமைவு | 15 |
| vi | நேர்த்தி | 15 |
| | **மொத்தம்** | 100 |

## 20.0 போட்டி இல : 02 கட்டுரை வரைதல்.

**இரண்டாம் பிரிவு – தரங்கள் 06, 07**

1. **விடயம் :**
போட்டி நடைபெறும் இடத்தில் தரப்படும் நான்கு தலைப்புக் களில் ஒன்றைத் தெரிவு செய்து கட்டுரை எழுதுதல்.

சொற்கள் : 200 சொற்களுக்குக் குறையாதிருத்தல் வேண்டும்.

2. **நேரம்** : ஒரு மணித்தியாலம்.

3. **புள்ளித்திட்டம்** : 100 புள்ளிகள்

| இல. | விடயம் | புள்ளி |
|---|---|---|
| i | தலைப்பும் பொருளும் | 20 |
| ii | கருத்தொழுங்கு | 25 |
| iii | சொல்லாட்சி, நடை | 20 |
| iv | அமைப்பு (எடுப்பு, தொடுப்பு, முடிப்பு) | 15 |
| v | நேர்த்தி | 10 |
| vi | உறுப்பமைவு | 10 |
| | **மொத்தம்** | 100 |

## 21.0 போட்டி இல : 03 கட்டுரை வரைதல்.

**மூன்றாம் பிரிவு – தரங்கள் 08, 09**

**1. விடயம் :**

போட்டி நடைபெறும் இடத்தில் தரப்படும் நான்கு தலைப்புகளில் ஒன்றினைத் தெரிவு செய்து கட்டுரை எழுதுதல்.

சொற்கள் : 300 சொற்களுக்குக் குறையாதிருத்தல் வேண்டும்.

**2. நேரம்** : ஒரு மணித்தியாலம்.

**புள்ளித்திட்டம்** : 100 புள்ளிகள்

| இல. | விடயம் | புள்ளி |
|---|---|---|
| i | தலைப்பும் பொருளும் | 20 |
| ii | கருத்தொழுங்கு | 25 |
| iii | சொல்லாட்சி, நடை | 20 |
| iv | அமைப்பு (எடுப்பு, தொடுப்பு, முடிப்பு) | 15 |
| v | நேர்த்தி | 10 |
| vi | உறுப்பமைவு | 10 |
| | **மொத்தம்** | **100** |

## 22.0 போட்டி இல : 04 கட்டுரை வரைதல், இலக்கியம் நயத்தல்.

**நான்காம் பிரிவு – தரங்கள் 10, 11**

**(1). விடயம் : 1. கட்டுரை வரைதல்.**

போட்டி நடைபெறும் இடத்தில் தரப்படும் நான்கு விடயங் களுள் ஒன்றினைத் தெரிவுசெய்து கட்டுரை எழுதுதல்.

கட்டுரைத் தலைப்புகள் : விஞ்ஞானம், தொழில்நுட்பம், தமிழ் மொழிப் பரம்பல் பற்றிய விடயங்களைத் தழுவியதாக அமைய வேண்டும்.

சொற்கள் : 350க்குக் குறையாதிருத்தல் வேண்டும்.

**2. நேரம்** : மூன்று மணித்தியாலம்.

**3. புள்ளித்திட்டம் :** 70 புள்ளிகள்

| இல. | விடயம் | புள்ளி |
|---|---|---|
| i | தலைப்பும் பொருளும் | 15 |
| ii | கருத்தொழுங்கு | 15 |
| iii | சொல்லாட்சி, நடை, எழுத்துப்பிழையின்மை | 15 |
| iv | அமைப்பு (எடுப்பு,தொடுப்பு,முடிப்பு) | 10 |
| v | நேர்த்தி | 10 |
| vi | உறுப்பமைவு | 05 |
| | **மொத்தம்** | **70** |

**(2). விடயம் : 11. இலக்கியம் நயத்தல்.**

இலக்கியச் செழுமைமிக்க இலக்கிய வடிவம் ஒன்றினை நயத்தல் வேண்டும்.சிறுகதை,புதுக்கவிதை, குறுநாவல் ஆகிய இவற்றுள் ஏதாவது ஒன்று தரப்படும்.

i. மையக் கருத்து
ii. கூறப்பட்டுள்ள உத்திகள்
iii. அணிகள் அல்லது அழகியல் அம்சங்கள்
iv. நயந்த பகுதியும் அதற்கான காரணங்களும் என்பவை பற்றி இலக்கிய நயத்துடன் எழுதுதல்.

சொற்கள் : கட்டுப்பாடில்லை

**புள்ளித்திட்டம் :** 30 புள்ளிகள்

| இல. | விடயம் | புள்ளி |
|---|---|---|
| i | மையக் கருத்து | 06 |
| ii | உத்திகள் | 07 |
| iii | அணிகள், அழகியல் அம்சங்கள் | 07 |
| iv | நயந்த பகுதியும் காரணங்களும் | 10 |
| v | **மொத்தம்** | **30** |

**இரண்டு விடயங்களினதும் மொத்தப் புள்ளிகளின் அடிப்படையிலேயே நிலைகள் தீர்மானிக்கப்படும்.**

## 23.0 போட்டி இல : 05 தமிழியற் கட்டுரை வரைதல், இலக்கியம் நயத்தல்.

**ஐந்தாம் பிரிவு – தரங்கள் 12, 13**

**(1). விடயம் :**

**1. தமிழியற் கட்டுரை வரைதல்.**

போட்டி நடைபெறும் இடத்தில் தரப்படும் நான்கு தலைப்புக் களுள் ஒன்று பற்றி எழுதுதல் வேண்டும். கட்டுரைக்காகத் தரப்படும் தலைப்புக்கள் தமிழியல் சார்பானவையாகவே அமையும். தமிழ்மொழி இலக்கிய வரலாறு, தமிழ்ப் புலவர்கள், தமிழுக்குத் தொண்டாற்றிய அறிஞர்கள் முதலிய விடயப்பரப்புக்களை உள்ளடக்கியதாகத் தலைப்புக்கள் அமையும். அத்துடன் தமிழ்மொழி வளர்ச்சிக்கும் கலை, கலாசார விருத்திக்கும் நவீன தொடர்பு சாதனங்கள் பயன்படுத்தப்படுதல் பற்றியும் தலைப்புக்கள் அமையலாம்.

சொற்கள்: 400 சொற்களுக்குக் குறையாதிருத்தல் வேண்டும்.

**2. நேரம் :** மூன்று மணித்தியாலம்.

**3. புள்ளித்திட்டம் :** 70 புள்ளிகள்.

| இல. | விடயம் | புள்ளி |
|---|---|---|
| i | தலைப்பும் பொருளும் | 20 |
| ii | தர்க்கரீதியான வெளிப்பாடு | 15 |
| iii | கருத்தொழுங்கும் அமைப்பும் | 15 |
| iv | சொல்லாட்சி | 10 |
| v | நேர்த்தி | 05 |
| vi | உறுப்பமைவு | 05 |
| **மொத்தம்** | | **70** |

**(2). விடயம் :**

**11. இலக்கியம் நயத்தல்.**

இலக்கியச் செழுமைமிக்க இலக்கிய வடிவம் ஒன்றினை நயத்தல் வேண்டும். சிறுகதை,புதுக்கவிதை, குறுநாவல் ஆகிய இவற்றுள் ஏதாவது ஒன்று தரப்படும்.

i. மையக்கருத்து

ii. கூறப்பட்டுள்ள உத்திகள்

iii. அணிகள்

iv. நயந்த பகுதியும் அதற்கான காரணங்களும் என்பவை பற்றி இலக்கிய நயத்துடன் எழுதுதல்.

சொற்கள் : கட்டுப்பாடில்லை.

**புள்ளித்திட்டம்** : 30 புள்ளிகள்.

| **இல.** | **விடயம்** | **புள்ளி** |
|---|---|---|
| i | மையக் கருத்து | 06 |
| ii | உத்திகள் | 07 |
| iii | அணிகள், அழகியல் அம்சங்கள் | 07 |
| iv | நயந்த பகுதியும் காரணங்களும் | 10 |
| **மொத்தம்** | | **30** |

**இரண்டு விடயங்களினதும் மொத்தப் புள்ளிகளின் அடிப்படை யிலேயே நிலைகள் தீர்மானிக்கப்படும்.**

## 24.0 போட்டி இல : 06 இலக்கணப் போட்டி

**நான்காம் பிரிவு – தரங்கள் 10, 11**

1. **விடயம் :**

மாணவர்களிடையே இலக்கண அறிவை விருத்தி செய்யும் நோக்கில் இப்போட்டி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. எழுத்துப் பரீட்சையாகவே இப்போட்டி இடம்பெறும். இவ்வினாப்பத்திரம் இரண்டு பகுதிகளைக் கொண்டிருக்கும். முதற்பகுதி நாற்பது குறுவினாக்களைக் கொண்டிருக்கும். ஒவ்வொரு வினாவிற்கும் தலா ஒரு புள்ளி வீதம் நாற்பது புள்ளிகள் வழங்கப்படும். இரண்டாம் பகுதி ஆறு வினாக்களைக் கொண்டிருக்கும். ஒவ்வொரு வினாவிற்கும் தலா 10 புள்ளிகள் வீதம் வழங்கப்படும். பாடநூல்கள், நன்னூல், இலக்கணச்சுருக்கம், தொல்காப்பியம் ஆகிய இலக்கண நூல்களைத் துணையாகக் கொண்டு வினாக்கள் தயாரிக்கப்படும்.

2. **நேரம் :**மூன்று மணித்தியாலம்.

3. **புள்ளித்திட்டம் :** 100 புள்ளிகள்.

| **இல.** | **விடயம்** | **புள்ளி** |
|---|---|---|
| i | குறுவிடை, பல்தேர்வு வினா 40x 01 | 40 |
| ii | கட்டமைப்பு வினா 06 x 10 | 60 |
| **மொத்தம்** | | **100** |

## 25.0 போட்டி இல : 07 இலக்கணப் போட்டி

**ஐந்தாம் பிரிவு – தரங்கள் 12,13**

1. **விடயம் :**

மாணவர்களிடையே இலக்கண அறிவை விருத்தி செய்யும் நோக்கில் இப்போட்டி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. எழுத்துப் பரீட்சையாகவே இப்போட்டி இடம்பெறும். இவ்வினாப்பத்திரம் இரண்டுபகுதிகளைக் கொண்டிருக்கும். முதற்பகுதி நாற்பது குறுவினாக்களைக் கொண்டிருக்கும். ஒவ்வொரு வினாவிற்கும் தலா ஒரு புள்ளி வீதம் நாற்பதுபுள்ளிகள் வழங்கப்படும். இரண்டாம்

பகுதி ஆறு வினாக்களைக் கொண்டிருக்கும். ஒவ்வொரு வினா விற்கும் தலா 10 புள்ளிகள் வீதம் வழங்கப்படும். பாடநூல்கள், நன்னூல், இலக்கணச்சுருக்கம்,தொல்காப்பியம் ஆகிய இலக்கண நூல்களைத் துணையாகக் கொண்டு வினாக்கள் தயாரிக்கப்படும்.

2. **நேரம்** : மூன்று மணித்தியாலம்

3. **புள்ளித்திட்டம்** : 100 புள்ளிகள்.

| **இல.** | **விடயம்** | **புள்ளி** |
|---|---|---|
| i | குறுவிடை, பல்தேர்வு வினா 40x 01 | 40 |
| ii | கட்டமைப்பு வினா 06 x 10 | 60 |
| **மொத்தம்** | | **100** |

## 26.0 போட்டி இல : 08 திறனாய்வுப் போட்டி

**ஐந்தாம் பிரிவு – தரங்கள் 12, 13**

1. **விடயம்** :

மாணவர்களிடையே விமர்சனக் கலையை வளர்க்கும் நோக்குடன் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. குறுநாவல், சிறுகதை, புதுக்கவிதை, உரைநடை போன்ற இலக்கிய வடிவங்களில் ஒன்று திறனாய் வுக்காகப் போட்டி நடைபெறும் இடத்தில் கொடுக்கப்படும். அந்த இலக்கிய வடிவங்களைப் போட்டியாளர்கள் வாசித்துத் திறனாய்வு செய்ய வேண்டும்.

சொற்களின் எண்ணிக்கை : கட்டுப்பாடில்லை

2. **நேரம்** :4 மணித்தியாலம்

3. **புள்ளித்திட்டம்** : 100 புள்ளிகள்

| **இல.** | **விடயம்** | **புள்ளி** |
|---|---|---|
| i | இலக்கியபூர்வமான அனுபவம் | 30 |
| ii | பகுப்பாய்வுத் திறன் | 30 |
| iii | தர்க்கரீதியான முன்வைப்பு | 30 |
| iv | மொழிக்கையாட்சி | 10 |
| **மொத்தம்** | | **100** |

## 27.0 போட்டி இல : 09 குறுநாடக ஆக்கம்

**நான்காம் பிரிவு – தரங்கள் 10, 11**

1. **விடயம் :**

   நன்கு பரிச்சயமான இலக்கியங்களின் சிறந்த உரிப்பொருட்களிலிருந்து போட்டி நடைபெறும் இடத்தில் தரப்படும் நான்கு தலைப்புகளில் ஒன்றினைத் தெரிவு செய்து, அதனை சமகாலச் சமூகப் பிரச்சினைகளோடு பின்னியதாக, நாடக எழுத்துரு ஒன்றினை ஆக்குதல்.

2. **நேரம்** : 3 மணித்தியாலங்கள்.

3. **புள்ளித்திட்டம்** : 100 புள்ளிகள்

| இல. | விடயம் | புள்ளி |
|---|---|---|
| i | புதிய ஆக்கத்திறன் | 30 |
| ii | முகிழ்க்கும் செய்தி | 25 |
| iii | சம்பாஷனை அமைப்பு (உரையாடல்) | 15 |
| iv | பாத்திர உருவாக்கம் | 15 |
| v | மேடைக் குறிப்பு | 15 |
| **மொத்தம்** | | **100** |

4. **போட்டியாளர்களுக்கான விசேட குறிப்புக்கள் :**

- 25–30 நிமிடங்களுக்குள் மேடையேற்றக்கூடியதாக அமைதல் வேண்டும்.
- பாடசாலை மாணவர்களுக்குரிய நாடகம் என்பதனை மனங் கொள்க.
- ஓரங்க நாடகமாகவோ அல்லது நான்கு காட்சிகளுக்கு மேற்படாமலோ எழுத்துரு அமைதல் வேண்டும்.
- நாடகக் கருவின் தொனிப்பொருளை மாற்றாது, உமது கற்பனையை நன்கு பயன்படுத்தலாம்.

## 28.0 போட்டி இல : 10 குறுநாடக ஆக்கம்

### ஐந்தாம் பிரிவு – தரங்கள் 12, 13

1. **விடயம் :**

   நன்கு பரிச்சயமான இலக்கியங்களின் சிறந்த உரிப் பொருட் களிலிருந்து போட்டி நடைபெறும் இடத்தில் தரப்படும் நான்கு தலைப்புக்களில் ஒன்றினைத் தெரிவு செய்து, அதனை சமகாலச் சமூகப் பிரச்சினைகளோடு பின்னி, நாடக எழுத்துரு ஒன்றினை ஆக்குதல்.

2. **நேரம்** : 3 மணித்தியாலங்கள்.

3. **புள்ளித்திட்டம்** : 100 புள்ளிகள்

| இல. | விடயம் | புள்ளி |
|---|---|---|
| i | புதிய ஆக்கத்திறன் | 30 |
| ii | முகிழ்க்கும் செய்தி | 25 |
| iii | சம்பாஷனை அமைப்பு (உரையாடல்) | 15 |
| iv | பாத்திர உருவாக்கம் | 15 |
| v | மேடைக் குறிப்பு | 15 |
| **மொத்தம்** | | **100** |

4. **போட்டியாளர்களுக்கான விசேட குறிப்புக்கள் :**

   - 25-30 நிமிடங்களுக்குள் மேடையேற்றக்கூடியதாக அமைதல் வேண்டும்.
   - பாடசாலை மாணவர்க்குரிய நாடகம் என்பதனை மனங் கொள்க.
   - ஓரங்க நாடகமாகவோ அல்லது நான்கு காட்சிகளுக்கு மேற்படாமலோ எழுத்துரு அமைதல் வேண்டும்.
   - நாடகக் கருவின் தொனிப்பொருளை மாற்றாது, உமது கற்பனையை நன்கு பயன்படுத்தலாம்.

## 29.0 போட்டி இல : 10 கவிதை ஆக்கம்.

**நான்காம் பிரிவு தரங்கள் 10, 11**

**1. விடயம் :**

மனித வாழ்க்கை இயல்புகளுடன் தொடர்புபடுத்தப்பட்ட கவிதைத் தலைப்புக்கள் போட்டி நடைபெறும் இடத்தில் தரப்படும். அவற்றில் ஒன்றினைத் தெரிவு செய்து கவிதை படைத்தல்.

சொற்களின் எண்ணிக்கை : 200சொற்களுக்குக் குறையாமல் எழுதுதல் வேண்டும்.

**2. நேரம்** : 3 மணித்தியாலங்கள்.

**3. சிறப்பு விதிகள் :**

- போட்டி ஆரம்பிக்கப்பட்டவுடன் ஆசனங்களில் அமர்ந்திருந்து ஆயத்தங்கள் செய்தல் வேண்டும்.
- வேறு போட்டி மட்டங்களிலோ, பத்திரிகைகள், சஞ்சிகை களிலோ எழுதப்பட்ட கவிதை வரிகளையோ, கவிதை யையோ மீண்டும் எழுதுதல் தவிர்க்கப்படல் வேண்டும்.

**4. புள்ளித்திட்டம்** : 100 புள்ளிகள்.

| **இ** | **விடயம்** | **புள்ளி** |
|---|---|---|
| i | பொருட்செறிவு | 25 |
| ii | யதார்த்த உணர்வு | 20 |
| iii | ஆக்கத்திறன் | 25 |
| iv | கவித்துவமும் வடிவமும் | 15 |
| v | ஓசையும் உணர்ச்சியும் | 15 |
| **மொத்தம்** | | **100** |

## 30.0 போட்டி இலக்கம் : 12 கவிதை ஆக்கம்

**ஐந்தாம் பிரிவு தரங்கள் 12, 13**

1. **விடயம் :**

மனித வாழ்க்கை இயல்புகளுடன் தொடர்புபடுத்தப்பட்ட கவிதைத் தலைப்புக்கள் போட்டி நடைபெறும் இடத்தில் தரப்படும். அவற்றில் ஒன்றினைத் தெரிவு செய்து கவிதை படைத்தல்.

சொற்களின் எண்ணிக்கை : 300 சொற்களுக்குக் குறையாமல் எழுதுதல் வேண்டும்.

2. **நேரம்** : 3 மணித்தியாலங்கள்.

3. **சிறப்பு விதிகள் :**

- போட்டி ஆரம்பிக்கப்பட்டவுடன் ஆசனங்களில் அமர்ந்திருந்து ஆயத்தங்கள் செய்தல் வேண்டும்.
- வேறு போட்டி மட்டங்களிலோ, பத்திரிகைகள், சஞ்சிகை களிலோ எழுதப்பட்ட கவிதை வரிகளையோ, கவிதை யையோ மீண்டும் எழுதுதல் தவிர்க்கப்படல் வேண்டும்.

4. **புள்ளித்திட்டம்** : 100 புள்ளிகள்

| இல. | விடயம் | புள்ளி |
|---|---|---|
| i | பொருட்செறிவு | 25 |
| ii | யதார்த்த உணர்வு | 20 |
| iii | ஆக்கத்திறன் | 25 |
| iv | கவித்துவமும் வடிவமும் | 15 |
| v | ஓசையும் உணர்ச்சியும் | 15 |
| **மொத்தம்** | | **100** |

## 31.0 போட்டி இலக்கம் : 13 சிறுகதை ஆக்கம்

**நான்காம் பிரிவு  தரங்கள் 10, 11**

**1. விடயம் :**

போட்டி நடைபெறும் இடத்தில் தரப்படும் கதைக்கருக்கள் நான்கினுள் ஒன்றினைத் தெரிவு செய்து சிறுகதை ஆக்குதல் வேண்டும். கதைக்குத் தலைப்பும் இடப்படல் வேண்டும்.

சொற்களின் எண்ணிக்கை : 350 சொற்களுக்குக் குறையாதிருத்தல் வேண்டும்.

**2. நேரம் :** 3 மணித்தியாலங்கள்.

**3. புள்ளித்திட்டம் :**

| இல. | விடயம் | புள்ளி |
|---|---|---|
| i | தலைப்பும் கதையும் | 20 |
| ii | அனுபவமும் கற்பனையும் | 20 |
| iii | அமைப்பும் வடிவமும் | 20 |
| iv | நிகழ்ச்சியும் கதைப்பின்னலும் | 20 |
| v | மொழியாட்சி | 20 |
| **மொத்தம்** | | **100** |

## 32.0 போட்டி இலக்கம் : 14 சிறுகதை ஆக்கம்

**ஐந்தாம் பிரிவு  தரங்கள் 12, 13**

**1. விடயம் :**

போட்டி நடைபெறும் இடத்தில் தரப்படும் கதைக்கருக்கள் நான்கினுள் ஒன்றினைத் தெரிவு செய்து சிறுகதை ஆக்குதல் வேண்டும். கதைக்குத் தலைப்பும் இடப்படல் வேண்டும்.

சொற்களின் எண்ணிக்கை : 450 சொற்களுக்குக் குறையாதிருத்தல் வேண்டும்.

**2. நேரம் :** 3 மணித்தியாலங்கள்

3. **புள்ளித்திட்டம் :**

| இல. | விடயம் | புள்ளி |
|---|---|---|
| i | தலைப்பும் கதையும் | 20 |
| ii | அனுபவமும் கற்பனையும் | 20 |
| iii | அமைப்பும் வடிவமும் | 20 |
| iv | நிகழ்ச்சியும் கதைப்பின்னலும் | 20 |
| v | மொழியாட்சி | 20 |
| **மொத்தம்** | | **100** |

## 33.0 போட்டி இலக்கம் : 15 தமிழறிவு வினாவிடை – எழுத்து

**(இப் போட்டியை, ஆரம்பப்பிரிவு பாடசாலைகள் தவிர, ஏனைய சகல பாடசாலைகளும் தெரிவு செய்தல் வேண்டும்.)**

1. **விடயம் :**

   கனிஷ்ட இடைநிலை (தரங்கள் 6, 7, 8) மாணவர்களிடையே தமிழ்மொழி இலக்கண, இலக்கிய அறிவை பரீட்சிப்பதற்காக இப்போட்டி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. தமிழிலக்கியம், தமிழிலக்கணம் ஆகியவற்றின் இயல்புகள், சிறப்புகள், பண்புகள், தமிழ்க்கலைச் சொல்லாக்கம் தழுவியவையாக வினாக்கள் அமைந்திருக்கும்.

2. **பிரிவு : குழு – 1 (தரங்கள் 6,7,8)**

3. **நேரம் :** 1 மணித்தியாலம் 15நிமிடங்கள்

**பொதுவான விதிகள் :**

33.1 இப்போட்டியில் போட்டியாளர்கள் குழுவாகவே பங்கு கொள்ள முடியும். ஒரு குழுவில் ஐந்து (5) பேர் இடம் பெறுவர். தரங்கள் 6, 7, 8 மாணவர்களைக் கொண்டு இக்குழு அமைக்கப்படல் வேண்டும். இக்குழுவில் **ஒரு வகுப்பில் இருந்து ஆகக் குறைந்தது ஒருவராவது** இடம்பெறல் வேண்டும்.

33.2 பாடசாலைகளில் தரங்கள் 6, 7 ஆகிய இரு வகுப்புக்கள் மட்டும் காணப்படின்,**ஒரு வகுப்பில் இருந்து ஆகக் குறைந்தது இருவராவது** இடம்பெறும் விதத்தில் இவ்விரு வகுப்புக்களில் இருந்தும் போட்டியாளர்கள் தெரிவு செய்யப்பட்டு குழு அமைக்கப்படல் வேண்டும்.

33.3 பாடசாலைகளில் தரம் 6 மட்டும் காணப்படின், ஐந்து (5) போட்டியாளர்களும் இவ்வகுப்பில் இருந்தே தெரிவு செய்யப்பட்டு குழு அமைக்கப்படல் வேண்டும்.

33.4 இப்போட்டி எழுத்துப் பரீட்சையாகவே இடம்பெறும்.

33.5 தரங்கள் 6, 7, 8 வரையான பாடநூல்களில் உள்ள பாட உள்ளடக்கத்தோடு தொடர்புபட்ட வகையில் வினாக்கள் அமைதல் வேண்டும்.

33.6 வினாப்பத்திரம் இரு பகுதிகளைக் கொண்டமையும். ஒவ்வொரு பகுதியும் தலா 20 குறுவினாக்களைக் கொண்டு, மொத்தம் 40 வினாக்களைக் கொண்டமையும்.

பகுதி 1 - இலக்கியம், கட்டுரைப் பகுதிகளைச் சார்ந்த வினாக்கள் (20 வினாக்கள்)

பகுதி 2 - இலக்கணம், மொழித்திறன்கள் சார்ந்த வினாக்கள் (20 வினாக்கள்)

33.7 வினாக்கள் வெகு சுட்டிப்பானவையாகவும், தெளிவாகவும், விளக்கம் உடையனவாகவும், எளிமையாகவும், ஒரு சொல்லில் அல்லது ஒரு தொடரில் விடைகள் தரக்கூடியன வாகவும் இருத்தல் வேண்டும்.

33.8 ஒரு குழுவிலுள்ள ஐந்து மாணவர்களும் பெற்றுக் கொள்ளும் மொத்தப் புள்ளிகளின் அடிப்படையிலேயே வெற்றி தோல்வி தீர்மானிக்கப்படும்.

**4. புள்ளித்திட்டம் :**

| இல. | விடயம் | புள்ளி |
|---|---|---|
| 1 | பகுதி 1 | 20 x 2 = 40 |
| 2 | பகுதி 2 | 20 x 3 = 60 |
| **மொத்தம்** | | **100** |

## 34.0 போட்டி இலக்கம் : 16 வாசிப்பு

**முதலாம் பிரிவு தரங்கள் 04, 05**

1. **விடயம் :**

   பாடநூல்கள் தவிர்ந்த ஏனைய கதை நூல்கள், சஞ்சிகைகள், துண்டுப்பிரசுரங்கள் முதலியவற்றில் நடுவர் குழுவினரால் குறித்துக் காட்டப்படும் பொருத்தமான உரை நடைப்பகுதி ஒன்றின் 15-20 வரிகளை வாசித்தல் வேண்டும்.

2. **நேரம் :** கட்டுப்பாடில்லை.

3. **புள்ளித்திட்டம் :** 100 புள்ளிகள்

| இல. | விடயம் | புள்ளி |
|---|---|---|
| i | நிலை | 10 |
| ii | தொனி | 20 |
| iii | உச்சரிப்பு | 25 |
| iv | விளக்கம் (கருத்துப்புலப்பாடு) | 20 |
| v | ஏற்றவேகம் | 15 |
| vi | பாணி | 10 |
| **மொத்தம்** | | **100** |

## 35.0 போட்டி இலக்கம் : 17 வாசிப்பு

**இரண்டாம் பிரிவு தரங்கள் 06, 07**

1. **விடயம் :**
   பாடநூல்கள் தவிர ஏனைய சிறுகதைகள், மர்மநாவல் தவிர்ந்த ஏனைய நாவல்கள், உரைநடைப் பகுதிகள் முதலியவற்றில் இருந்து நடுவர் குழுவினால் குறித்துக் காட்டப்படும் பொருத்தமான உரைநடைப் பகுதி ஒன்றின் 35-40 வரிகளை வாசித்தல் வேண்டும்.

2. **நேரம் :** கட்டுப்பாடில்லை.

3. **புள்ளித்திட்டம்** : 100 புள்ளிகள்

| இல. | விடயம் | புள்ளி |
|---|---|---|
| i | நிலை | 10 |
| ii | தொனி | 20 |
| iii | உச்சரிப்பு | 25 |
| iv | விளக்கம் (கருத்துப்புலப்பாடு) | 20 |
| v | ஏற்றவேகம் | 15 |
| vi | பாணி | 10 |
| **மொத்தம்** | | **100** |

## 36.0 போட்டி இலக்கம் : 18 வாசிப்பு

**மூன்றாம் பிரிவு தரங்கள் 08, 09**

1. **விடயம்** :

   பாடநூல்கள் தவிர ஏனைய சிறுகதைகள், மர்மநாவல் தவிர்ந்த ஏனைய நாவல்கள், உரைநடைப் பகுதிகள் முதலியவற்றில் இருந்து நடுவர் குழுவினால் குறித்துக் காட்டப்படும் பொருத்த மான உரைநடைப் பகுதி ஒன்றின் 50 வரிகளுக்குக் குறையாது வாசித்தல் வேண்டும்.

2. **நேரம்** : கட்டுப்பாடில்லை.

3. **புள்ளித்திட்டம்** : 100 புள்ளிகள்

| இல. | விடயம் | புள்ளி |
|---|---|---|
| i | நிலை | 10 |
| ii | தொனி | 20 |
| iii | உச்சரிப்பு | 25 |
| iv | விளக்கம் (கருத்துப்புலப்பாடு) | 20 |
| v | ஏற்றவேகம் | 15 |
| vi | பாணி | 10 |
| **மொத்தம்** | | **100** |

## 37.0 போட்டி இலக்கம் : 19 ஆக்கத்திறன் வெளிப்பாடு - கதைகூறல்

**முதலாம் பிரிவு - தரங்கள் 04, 05**

**விடயம் :**

புதிய கல்விச் சீர்திருத்தத்தின் அடிப்படையில் இடம்பெறும் புதிய ஆக்கத்திறன் வெளிப்பாடு. புதிதாக ஆக்கஞ்செய்யப்பட்ட கதை ஒன்றின் முற்பகுதி எழுத்தில் தரப்படும். அதைப் படித்த பின்னர் கற்பனை செய்து, சிந்தித்து முற்பகுதியுடன் பொருத்தமான முறையில் தொடர்புபடுத்தி, உரிய பாணியில் கதையினைக் கூறி, நிறைவு செய்தல் வேண்டும்.

2. **நேரம்** : வாசிப்பதற்கும் யோசிப்பதற்கும் 10 நிமிடங்கள்
கதை கூறும் நேரம் 05 - 07 நிமிடங்களுக்குள்.

3. **புள்ளித்திட்டம்** : 100 புள்ளிகள்

| இல. | விடயம் | புள்ளி |
|---|---|---|
| i | கற்பனைத் திறன் | 20 |
| ii | தொடுத்துச் செல்லும் பாங்கு | 25 |
| iii | கதை கூறும் பாணி | 15 |
| iv | சொல்வளம் | 15 |
| v | கதையின் முழுமை | 20 |
| vi | நேரம் | 05 |
| **மொத்தம்** | | **100** |

## 38.0 போட்டி இலக்கம் : 20 பேச்சு

**முதலாம் பிரிவு : தரங்கள் 04, 05**

1. **விடயம் :**

மனனஞ் செய்யப்பட்ட விடயத்தைப் பேசுதல் வேண்டும். போட்டி யாளரால் திருவுளச்சீட்டு மூலம் தெரிவு செய்யப்படும் ஒரு தலைப்பில் பேசுதல் வேண்டும்.

**2. தலைப்பு : (இணைப்பினைப் பார்க்கவும்)**

**3. நேரம் : 5** நிமிடம்

**4. புள்ளித்திட்டம்** : 100 புள்ளிகள்

| **இல.** | **விடயம்** | **புள்ளி** |
|---|---|---|
| i | பொருட் பொருத்தம் | 20 |
| ii | அவை அஞ்சாமை | 20 |
| iii | உச்சரிப்புத் தெளிவு | 20 |
| iv | வெளிப்பாட்டுத் திறன் | 20 |
| v | நிலை / மெய்ப்பாடு | 15 |
| vi | நேரம் | 05 |
| **மொத்தம்** | | **100** |

## 39.0 போட்டி இலக்கம் : 21 பேச்சு

**இரண்டாம் பிரிவு : தரங்கள் 06, 07**

**1. விடயம் :**

மனனஞ் செய்யப்பட்ட விடயத்தைப் பேசுதல் வேண்டும். போட்டியாளரால் திருவுளச்சீட்டு மூலம் தெரிவு செய்யப்படும் ஒரு தலைப்பில் பேசுதல் வேண்டும்.

**2. தலைப்பு : (இணைப்பினைப் பார்க்கவும்)**

**3. நேரம்** : 5 நிமிடம்

**4. புள்ளித்திட்டம்** : 100 புள்ளிகள்

| **இல.** | **விடயம்** | **புள்ளி** |
|---|---|---|
| i | பொருட்புலப்பாடு | 20 |
| ii | தொனியும் தெளிவும் | 20 |
| iii | நிலை / மெய்ப்பாடு | 15 |
| iv | அவையீர்ப்பு | 20 |
| v | பேச்சு வன்மை | 20 |
| vi | நேரம் | 05 |
| **மொத்தம்** | | **100** |

## 40.0 போட்டி இலக்கம் : 22 பேச்சு

**மூன்றாம் பிரிவு : தரங்கள் 08, 09**

1. **விடயம் :**

   போட்டி நடைபெறும் இடத்தில் பின்வரும் நான்கு விடயப்பரப்புக ளுள்ளும் அடங்கக் கூடியதாக முறையே நான்கு விடயத் தலைப்புக்கள் முன் வைக்கப்படும். இவற்றுள் ஒன்றினைத் தெரிவு செய்து பேசுதல் வேண்டும்.

2. **விடயப்பரப்பு : (இணைப்பினைப் பார்க்கவும்)**

3. **நேரம் :**

   ஒவ்வொரு போட்டியாளருக்கும் தயார் செய்வதற்கு 15 நிமிடங் களும், பேசுவதற்கு 05 நிமிடங்களும் வழங்கப்படும்.

   தலைப்புக் கொடுக்கப்பட்ட பின்னர் யாருடனும் தொடர்பாடுவ தற்கு அனுமதி வழங்கப்படமாட்டாது.

4. **புள்ளித்திட்டம் : 100** புள்ளிகள்.

| இல. | விடயம் | புள்ளி |
|---|---|---|
| i | பொருட்புலப்பாடு | 20 |
| ii | தொனியும் தெளிவும் | 20 |
| iii | நிலை / மெய்ப்பாடு | 15 |
| iv | அவையீர்ப்பு | 20 |
| v | பேச்சு வன்மை | 20 |
| vi | நேரம் | 05 |
| **மொத்தம்** | | **100** |

## 41.0 போட்டி இலக்கம் : 23 பேச்சு

**நான்காம் பிரிவு : தரங்கள் 10, 11**

1. **விடயம் :**

   போட்டி நடைபெறும் இடத்தில் சில தலைப்புக்கள் வழங்கப் படும். போட்டியாளர் திருவுளச்சீட்டு மூலம் தெரிந்தெடுத்த தலைப்பில் பேசுதல் வேண்டும். ஒருவர் பேசிய தலைப்பில் இன்னொருவர் பேசாதவாறு தலைப்புக்கள் தயாரிக்கப்படுதல் வேண்டும்.

**2. நேரம் :**

ஒவ்வொரு போட்டியாளருக்கும் தயார் செய்வதற்கு 15 நிமிடங் களும், பேசுவதற்கு 05 நிமிடங்களும் வழங்கப்படும்.

தலைப்புக் கொடுக்கப்பட்ட பின்னர் யாருடனும் தொடர்புகொள்வ தற்கு அனுமதி வழங்கப்படமாட்டாது.

**3. புள்ளித்திட்டம் :** 100 புள்ளிகட்கு.

| **இல.** | **விடயம்** | **புள்ளி** |
|---|---|---|
| i | பொருட்புலப்பாடு | 20 |
| ii | தொனியும் தெளிவும் | 20 |
| iii | நிலை / மெய்ப்பாடு | 15 |
| iv | அவையீர்ப்பு | 20 |
| v | பேச்சு வன்மை | 20 |
| vi | நேரம் | 05 |
| **மொத்தம்** | | **100** |

## 42.0 போட்டி இலக்கம் : 24 பேச்சு

**ஐந்தாம் பிரிவு : தரங்கள் 12, 13**

**1. விடயம் :**

போட்டி நடைபெறும் இடத்தில் சில தலைப்புக்கள் வழங்கப் படும். போட்டியாளர் திருவுளச்சீட்டு மூலம் தெரிந்தெடுத்த தலைப்பில் பேசுதல் வேண்டும். ஒருவர் பேசிய தலைப்பில் இன்னொருவர் பேசாதவாறு தலைப்புகள் தயாரிக்கப்படுதல் வேண்டும்.

**2. நேரம் :**

ஒவ்வொரு போட்டியாளருக்கும் தயார்செய்வதற்கு 15 நிமிடங் களும், பேசுவதற்கு 05 நிமிடங்களும் வழங்கப்படும்.

தலைப்புக் கொடுக்கப்பட்ட பின்னர் யாருடனும் தொடர்புகொள்வ தற்கு அனுமதி வழங்கப்படமாட்டாது.

3. **புள்ளித்திட்டம்** : 100 புள்ளிகளுக்கு.

| இல. | விடயம் | புள்ளி |
|---|---|---|
| i | பொருட்புலப்பாடு | 20 |
| ii | தொனியும் தெளிவும் | 20 |
| iii | நிலை / மெய்ப்பாடு | 15 |
| iv | அவையீர்ப்பு | 20 |
| v | பேச்சு வன்மை | 20 |
| vi | நேரம் | 05 |
| **மொத்தம்** | | **100** |

## 43.0 போட்டி இலக்கம் : 25 பாவோதல்

**முதலாம் பிரிவு : தரங்கள் 04, 05**

**1. விடயம் : 01. திருக்குறள் : ஒரு அதிகாரம்**

குறிப்பிடப்படும் **ஒரு அதிகாரத்தில்** அடங்கிய பத்துக் குறள்களுள், திருவுளச்சீட்டு மூலம் தேர்ந்தெடுத்து **இரண்டு குறள்களை** ஓதுதல் வேண்டும்.

**அத்துடன்**

**02. தெரிவுப்பாடல்கள் - இரண்டு**

தரப்பட்ட **இரண்டு பாடல்களுள்** ஒன்றினைப் போட்டி யாளர் திருவுளச்சீட்டு மூலம் தேர்ந்தெடுத்து ஓதுதல் வேண்டும்.
**(இணைப்பினைப் பார்க்கவும்)**

## 44.0 போட்டி இலக்கம் : 26 பாவோதல்

**இரண்டாம் பிரிவு : தரங்கள் 06, 07**

**1. விடயம் : 01. திருக்குறள் : இரண்டு அதிகாரம்**

ஒவ்வொரு அதிகாரத்திலும் தலா இரண்டு குறள்கள் வீதம் திருவுளச்சீட்டு மூலம் தேர்ந்தெடுத்து **நான்கு** குறள்களை ஓதுதல் வேண்டும்.

**அத்துடன்**

**02. தெரிவுப்பாடல்கள் - இரண்டு**

தரப்பட்ட இரண்டு பாடல்களுள் ஒன்றினைப் போட்டி யாளர் திருவுளச்சீட்டு மூலம் தேர்ந்தெடுத்து ஓதுதல் வேண்டும்.

**(இணைப்பினைப் பார்க்கவும்)**

## 45.0 போட்டி இலக்கம் : 27 பாவோதல்

**மூன்றாம் பிரிவு : தரங்கள் 08, 09**

**1. விடயம் : 01. திருக்குறள் : இரண்டு அதிகாரங்கள்**

ஒவ்வொரு அதிகாரத்திலும் தலா இரண்டு குறள்கள் வீதம் திருவுளச்சீட்டு மூலம் தேர்ந்தெடுத்து **நான்கு** குறள்களை ஓதுதல் வேண்டும்.

**அத்துடன்**

**02. தெரிவுப்பாடல்கள் - மூன்று**

தரப்பட்ட மூன்று பாடல்களுள் இரண்டினைப் போட்டி யாளர் திருவுளச்சீட்டு மூலம் தேர்ந்தெடுத்து ஓதுதல் வேண்டும்.

**(இணைப்பினைப் பார்க்கவும்)**

## 46.0 போட்டி இலக்கம் : 28 பாவோதல்

**நான்காம் பிரிவு : தரங்கள் 10, 11**

**1. விடயம் : 01. திருக்குறள் : இரண்டு அதிகாரங்கள்**

ஒவ்வொரு அதிகாரத்திலும் தலா இரண்டு குறள்கள் வீதம் திருவுளச்சீட்டு மூலம் தேர்ந்தெடுத்து **நான்கு** குறள்களை ஓதுதல் வேண்டும்.

**அத்துடன்**

**02. தெரிவுப்பாடல்கள் - நான்கு**

தரப்பட்ட நான்கு பாடல்களுள் **மூன்றினைப்** போட்டி யாளர் திருவுளச்சீட்டு மூலம் தேர்ந்தெடுத்து ஓதுதல் வேண்டும்.

**(இணைப்பினைப் பார்க்கவும்)**

**பாவோதலுக்கான பொது விதிகள்**

- முதலில் பாடலைச் சொல்ல வேண்டும்.
- அடுத்து பதப் பிரிப்புச் செய்து, சொல்ல வேண்டும்.
- அதன் பின் பொருளைக் கூறல் வேண்டும்.
- நிறைவாக குறளையும், பாடலையும் ஓதுதல் வேண்டும்.
- செய்யுள்களை ஓசையும் உணர்ச்சியும் வெளிப்படக்கூடிய முறையில் விளக்கமும் தெளிவும் புலப்படுமாறு ஓத வேண்டும்.
- இராகம் தேவையில்லை.

அனைத்துப் பாவோதல் பிரிவுகளுக்குமான புள்ளித்திட்டம் : 100 புள்ளிகளுக்கு

| **இல.** | **விடயம்** | **புள்ளி** |
|---|---|---|
| i | மனனத்திறன் | 25 |
| ii | பொருள் விளங்க ஓதுதல் | 20 |
| iii | ஓசையும் உணர்ச்சியும் | 20 |
| iv | தெளிவும் விளக்கமும் | 25 |
| v | நிலை / மெய்ப்பாடு | 10 |
| **மொத்தம்** | | **100** |

- போட்டியாளர்கள் பாடசாலை சீருடையுடன் மாத்திரமே பாவோதல் போட்டியில் பங்குகொள்ளல் வேண்டும்.
- **ஒவ்வொரு பிரிவிற்கும் ஒதுக்கப்பட்ட திருக்குறள் அதிகாரங்கள், தெரிவுப் பாடல்களின் எண்ணிக்கை பின்வருமாறு:**

| **பாவோதல்** | **பிரிவு - i** | **பிரிவு - ii** | **பிரிவு - iii** | **பிரிவு - iv** |
|---|---|---|---|---|
| திருக்குறள்- தரப்பட்டுள்ள அதிகாரம் | அதிகாரம் 1 | அதிகாரம் 2 | அதிகாரம் 2 | அதிகாரம் 2 |
| ஓத வேண்டிய குறள்கள் | இரண்டு (2) | நான்கு (4) | நான்கு (4) | நான்கு (4) |
| தரப்பட்டுள்ள தெரிவுப்பாடல்கள் | 2 பாடல்கள் | 2 பாடல்கள் | 3 பாடல்கள் | 4 பாடல்கள் |
| ஓத வேண்டிய பாடல்கள் | ஒன்று (1) | ஒன்று (1) | இரண்டு (2) | மூன்று (3) |

## 47.0 போட்டி இலக்கம் : 29 இலக்கிய விமர்சனம்

**ஐந்தாம் பிரிவு : தரங்கள் 12, 13**

**1. விடயம்**

தரப்பட்டுள்ள இரண்டு பாடல்களையும் விமர்சனம் செய்தல் வேண்டும்.

போட்டியாளர் அமர்ந்திருந்தவாறு விமர்சனத்தை முன்வைத்தல் வேண்டும்.
**(இணைப்பினைப் பார்க்கவும்)**

**2. நேரம்** : 20 நிமிடம்

**3. புள்ளித்திட்டம்** : 100 புள்ளிகளுக்கு

| இல. | விடயம் | புள்ளி |
|---|---|---|
| i | பொருளமைவு | 10 |
| ii | விமர்சிக்கும் திறன் | 30 |
| iii | மொழியாளுமை | 30 |
| iv | உச்சரிப்பு | 20 |
| v | நிலை | 05 |
| vi | நேரம் | 05 |
| **மொத்தம்** | | **100** |

## 48.0 போட்டி இலக்கம் : 30 தனி நடிப்பு

**நான்காம் பிரிவு தரங்கள் : 10, 11**

**1. விடயம்**

போட்டி நடைபெறும் இடத்தில் முன்வைக்கப்படும் நான்கு உரிப் பொருள்களிலிருந்து ஒன்றினைத் திருவுளச்சீட்டு மூலம் தெரிவு செய்து தனி நடிப்பொன்றினை ஆற்றுகை செய்தல் வேண்டும்.

**2. நேரம் :**

ஒவ்வொரு போட்டியாளருக்கும் தயார் செய்வதற்கு 15 நிமிடங் களும், ஆற்றுகைக்காக 05 நிமிடங்களும் வழங்கப்படும்.

உரிப்பொருள் வழங்கப்பட்டதன் பின்னர் யாருடனும் தொடர்பு கொள்வதற்கு அனுமதி வழங்கப்படமாட்டாது.

**பொதுவான விதிகள் :**

48.1 நடிப்பு தொடங்கியதில் இருந்து முடியும் வரை மேடையை வெறுமையின்றிக் கையாளல் வேண்டும்.

48.2 ஒருவர் பல பாத்திரங்கள் மூலமாகவோ அல்லது பல பாத்திரங்கள் முன்னால் உள்ளது போன்று உரையாடல், நடிப்பு மூலமாகவோ வெளிப்படுத்தலாம்.

48.3 வேறு பாத்திரங்களாக மாறுவதைக் காட்டும் நேரத்தில் சுழற்சி மூலமோ, பாத்திர இடமாற்றம் மூலமோ காட்டுதல் வேண்டும்.

3. **புள்ளித்திட்டம்** : 100 புள்ளிகளுக்கு

| இல. | விடயம் | புள்ளி |
|---|---|---|
| i | தலைப்பிற்கேற்ற பொருள் வெளிப்பாடு | 20 |
| ii | நடிப்பாற்றல் | 25 |
| iii | உணர்ச்சி வெளிப்பாடு | 20 |
| iv | மேடை கையாள்கை | 15 |
| v | குரல் வெளிப்பாடு | 15 |
| vi | நேரம் | 05 |
| **மொத்தம்** | | **100** |

## 49.0 போட்டி இலக்கம் : 31 அறிவிப்பாளர்

**ஐந்தாம் பிரிவு தரங்கள் : 12, 13**

1. **விடயம்**

போட்டி நடைபெறும் இடத்தில் போட்டியாளர்களுக்குச் சில களப் பின்னணிகள் (சூழலமைவு) வழங்கப்படும். போட்டியாளர்கள் திருவுளச்சீட்டு மூலம் ஒரு களப்பின்னணியைத் தெரிவு செய்து அறிவிப்புச் செய்தல் வேண்டும். வழங்கப்பட்ட சூழலமைவு தொடர்பான ஆழமான சிந்தனை, அதனை வெளிப்படுத்தும் விதம், சரளமான பேச்சுத் திறன், மொழி ஆளுமை, உச்சரிப்புத் தெளிவு, சமயோசித உத்தி என்பன இதன்போது கவனிக்கப் படும்.

**2. நேரம் :**

தயார்படுத்தலுக்காக 10 நிமிடங்கள் வழங்கப்படும்.

அறிவிப்புக்கான நேரம் 5 நிமிடங்கள்

**பொதுவான விதிகள் :**

49.1 வானொலி, தொலைக்காட்சி, பொது மேடை நிகழ்ச்சிகள் போன்ற பல்துறைசார் அறிவிப்புப்பாணிகள் இடம்பெறல் வேண்டும்.

49.2 போட்டியாளர் பாடசாலைச் சீருடையுடனேயே போட்டியில் பங்கு பற்றல் வேண்டும். (கழுத்துப்பட்டி தவிர்த்தல் வேண்டும்)

49.4 அறிவிப்புச் செய்யும் போது பின்வரும் விடயங்கள் கவனத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

| ஊடகம் | விடயம் | நிலை |
|---|---|---|
| வானொலி | செய்தி வாசிப்பு | அமர்ந்த நிலை |
| | நிகழ்ச்சித் தொகுப்பு | அமர்ந்த நிலை |
| | விளம்பரம் | அமர்ந்த நிலை |
| | செவ்வி காணல் | அமர்ந்த நிலை |
| தொலைக்காட்சி | செய்தி வாசிப்பு | அமர்ந்த நிலை |
| | நிகழ்ச்சித் தொகுப்பு | நின்ற அல்லது அமர்ந்த நிலை |
| | விளம்பரம் | நின்ற அல்லது அமர்ந்த நிலை |
| | செவ்வி காணல் | நின்ற அல்லது அமர்ந்த நிலை |
| | நேர்முக வர்ணனை | நின்ற அல்லது அமர்ந்த நிலை |
| பொது மேடைகள் | நிகழ்ச்சித் தொகுப்பு | நின்ற நிலை |
| பொது இடங்கள் | நேர்முக வர்ணனை | நின்ற நிலை |
| | நேரடி ஒளிபரப்பு | நின்ற நிலை |

49.5 போட்டியின் போது போட்டியாளர்கள் ஒலி வாங்கியைப் பயன் படுத்தியே அறிவிப்புச் செய்தல் வேண்டும். இது மாகாண, தேசிய மட்டங்களிற்கு கட்டாயமானது. ஒலி வாங்கி வசதி களை போட்டி ஏற்பாட்டாளர்களே ஒழுங்கமைத்துக் கொடுத்தல் வேண்டும்.

3. **புள்ளித்திட்டம்** : 100 புள்ளிகளுக்கு.

| **இல.** | **விடயம்** | **புள்ளி** |
|---|---|---|
| i | மொழிவளம் | 20 |
| ii | உச்சரிப்புத் தெளிவு | 25 |
| iii | குரல் வளம், தொனி | 10 |
| iv | சமயோசித உத்தி | 30 |
| v | உணர்ச்சி வெளிப்பாடு | 10 |
| vi | நேரம் | 05 |
| **மொத்தம்** | | **100** |

## 50.0 போட்டி இலக்கம் : 32 இசையும் அசைவும்

**முதலாம் பிரிவு தரங்கள் : 04, 05**

1. **விடயம் :**

தரப்பட்ட பாடலுக்குப் பொருத்தமான இசையை அமைத்து அபிநயத்துடன் பாடுதல். வேடம் புனைதல், ஒப்பனைகள், விசேடமான ஆடை அணிகள் முற்றாகத் தவிர்த்தல் வேண்டும்.
**(இணைப்பினைப் பார்க்கவும்)**

2. **நேரம் : 4 – 5** நிமிடங்கள்.

**பொதுவான விதிகள் :**

50.1 ஆரம்பப்பிரிவு ஆசிரியர்கள் மாத்திரமே இப் போட்டிக்கு நடுவராகக் கடமையாற்ற வேண்டும்.

3. **புள்ளித்திட்டம்** : 100 புள்ளிகளுக்கு.

| **இல.** | **விடயம்** | **புள்ளி** |
|---|---|---|
| i | பாடுந்திறனும் ஓசையும் | 30 |
| ii | லயம் | 10 |
| iii | மெய்ப்பாட்டுணர்ச்சி | 15 |
| iv | அபிநயம் | 20 |
| V | உச்சரிப்புத் தெளிவு | 10 |
| Vi | இசை ஆக்கம் | 10 |
| vii | நேரம் | 05 |
| **மொத்தம்** | | **100** |

## 51.0 போட்டி இலக்கம் : 33 இசை - தனி

**இரண்டாம் பிரிவு : தரங்கள் 06, 07**

1. விடயம் : இணைப்பினைப் பார்க்கவும்.
2. நேரம் : 04-05 நிமிடங்கள்
3. புள்ளித்திட்டம் : 100 புள்ளிகளுக்கு

| இல. | விடயம் | புள்ளி |
|---|---|---|
| i | பாடுந்திறன் | 20 |
| ii | சுருதி | 20 |
| iii | லயம் | 20 |
| iv | பாவம் | 15 |
| v | உச்சரிப்புத்தெளிவு | 10 |
| vi | நிலை - சமர்ப்பணம் | 10 |
| vii | நேரம் | 05 |
| **மொத்தம்** | | **100** |

## 52.0 போட்டி இலக்கம் : 34 இசை - தனி

**மூன்றாம் பிரிவு : தரங்கள் 08, 09**

1. விடயம் : இணைப்பினைப் பார்க்கவும்
2. நேரம் : 05-06 நிமிடங்கள்
3. புள்ளித்திட்டம் : 100 புள்ளிகளுக்கு.

| இல. | விடயம் | புள்ளி |
|---|---|---|
| i | பாடுந்திறன் | 20 |
| ii | சுருதி | 20 |
| iii | லயம் | 20 |
| iv | பாவம் | 15 |
| v | உச்சரிப்புத்தெளிவு | 10 |
| vi | நிலை - சமர்ப்பணம் | 10 |
| vii | நேரம் | 05 |
| **மொத்தம்** | | **100** |

## 53.0

## போட்டி இலக்கம் : 35 இசை - தனி

**நான்காம் பிரிவு : தரங்கள் 10, 11**

1. விடயம் : இணைப்பினைப் பார்க்கவும்
2. நேரம் : 06 - 08 நிமிடங்கள்
3. புள்ளித்திட்டம் : 100 புள்ளிகளுக்கு.

| இல. | விடயம் | புள்ளி |
|---|---|---|
| i | பாடுந்திறன் | 20 |
| ii | சுருதி | 20 |
| iii | லயம் | 20 |
| iv | பாவம் | 15 |
| v | உச்சரிப்புத்தெளிவு | 10 |
| vi | நிலை - சமர்ப்பணம் | 10 |
| vii | நேரம் | 05 |
| மொத்தம் | | 100 |

## 54.0 போட்டி இலக்கம் : 36 இசை - தனி

**ஐந்தாம் பிரிவு : தரங்கள் 12, 13**

1. விடயம் : இணைப்பினைப் பார்க்கவும்
2. நேரம் : 12 - 15 நிமிடங்கள்
3. புள்ளித்திட்டம் : 100 புள்ளிகளுக்கு.

| இல. | விடயம் | புள்ளி |
|---|---|---|
| i | இராக ஆலாபனை | 15 |
| ii | சுருதி | 15 |
| iii | நிரவல் | 10 |
| iv | கற்பனாஸ்வரம் | 10 |
| v | பாடுந்திறன் | 10 |
| vi | லயம் | 10 |
| vii | பாவம் | 10 |
| viii | உச்சரிப்புத்தெளிவு | 10 |
| ix | நிலை | 05 |
| x | நேரம் | 05 |
| மொத்தம் | | 100 |

## 55.0

## போட்டி இலக்கம் : 37 இசை குழு I

**பிரிவு : தரங்கள் 06, 07, 08, 09**

1. விடயம் : இணைப்பினைப் பார்க்கவும்
2. நேரம் : 06 - 08 நிமிடங்கள்
3. புள்ளித்திட்டம் : 100 புள்ளிகளுக்கு.

| இல. | விடயம் | புள்ளி |
|---|---|---|
| i | பாடுந்திறன் | 20 |
| ii | சுருதி | 15 |
| iii | லயம் | 15 |
| iv | பாவம் | 15 |
| v | ஒத்திசைவு | 15 |
| vi | உச்சரிப்புத்தெளிவு | 10 |
| vii | நிலை - சமர்ப்பணம் | 05 |
| viii | நேரம் | 05 |
| **மொத்தம்** | | **100** |

## 56.0
## போட்டி இலக்கம் : 38 இசை குழு : II

**பிரிவு : தரங்கள் 10, 11, 12, 13**

1. விடயம் : இணைப்பினைப் பார்க்கவும்
2. நேரம் : 10 - 12 நிமிடங்கள்
3. புள்ளித்திட்டம் : 100 புள்ளிகளுக்கு.

| இல. | விடயம் | புள்ளி |
|---|---|---|
| i | பாடுந்திறன் | 20 |
| ii | சுருதி | 15 |
| iii | லயம் | 15 |
| iv | பாவம் | 15 |
| v | ஒத்திசைவு | 15 |
| vi | உச்சரிப்புத்தெளிவு | 10 |
| vii | நிலை - சமர்ப்பணம் | 05 |
| viii | நேரம் | 05 |
| **மொத்தம்** | | **100** |

## 57.0 நடனப் போட்டிகளுக்கான பொதுவான விதிகள் :

57.1 நடன நிகழ்ச்சிகள் எதுவாயினும் நட்டுவாங்கம் செய்பவர் இத்துறையில் வாண்மை வாய்ந்த ஓர் ஆசிரியராகவே இருத்தல் வேண்டும்.

57.2 தனிநடனப் போட்டிகளுக்கு நட்டுவாங்கத் தாளமும் நடனத்துக் குரிய பக்கப் பாட்டும் போதுமானது. பக்க வாத்தியங்கள் தவிர்க்கப்படல் வேண்டும். பாடசாலைச் சங்கீத ஆசிரியரோ அல்லது அதே பாடசாலை மாணவரோ பக்கப்பாட்டு பாடல் வேண்டும்.

57.3 குழுநடனம், நாட்டிய நாடகம் என்பவற்றிற்கு உரிய பக்க வாத்தியங்களைப் பயன்படுத்திக் கொள்ளலாம். பக்க வாத்தியக்காரர்கள் இல்லாதவிடத்து, வலயக் கல்விப் பணிப் பாளரின் அனுமதியைப் பெற்று, பக்கவாத்தியக்காரர்கள் வெளியிலிருந்தும் பெறப்படலாம்.

57.4 இரண்டாம் பிரிவிற்கான உடை, பாவாடை, சட்டை மற்றும் தமிழர் கலாசார உடை அணியலாம். நடனம் செய்வதற்கு ஏற்றாற்போல் இருத்தல் வேண்டும்.

57.5 **மூன்றாம் பிரிவிற்கான உடை**: சாஸ்திரிய நடனம் ஆகை யால் பரத நாட்டிய உடை போதுமானது உ.ம் பிஜாமா, மேலங்கி, இடுப்புப்பட்டி ஆகியன நடனத்திற்கு ஏற்பவும், தமிழ் கலாசாரத்திற்கு ஏற்ப எளிமையான முறையிலும் அமைதல் வேண்டும்.

57.6 **நான்காம் பிரிவிற்கான உடை**: பரத நாட்டிய பயிற்சி உடை போதுமானது. மேற் குறிப்பிட்ட உடை போன்று தமிழ்க் கலாசாரத்திற்கு ஏற்ப எளிமையான முறையில் அமைதல் வேண்டும்.

57.7 **ஐந்தாம் பிரிவிற்கான உடை**: வளர்ந்தவர்க்கான பரத நாட்டியப் பயிற்சி உடை போதுமானது. உ.ம் பிஜாமா,சேலை, சட்டை போன்றன.

57.8 போட்டியாளர்கள் கொஸ்டியும் (Costume) ஆடை அணிந்து ஆடுபவர்களாயின் நிகழ்ச்சியிலிருந்து நீக்கப்படுவர். தனி நடனப்போட்டிகளில் உடையலங்காரத்திற்கு புள்ளிகள் வழங்கப்படமாட்டாது.

## 58.0 போட்டி இலக்கம் : 39 நடனம் - தனி

**இரண்டாம் பிரிவு : தரங்கள் 06, 07**

1. **விடயம் : (இணைப்பினைப் பார்க்கவும்)**
2. நேரம் : 5-6 நிமிடங்கள்

**பொதுவான விதிகள்**

58.1 அபிநயத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கப்படல் வேண்டும்.

58.2 வகுப்பின் தரத்திற்கேற்ப பரதநடன அடவுகள் பிரயோகிக்கலாம்.

58.3 ஜதிகள், ஸ்வரக் கோவைகள் தவிர்க்கப்படல் வேண்டும்.

58.4 நட்டுவாங்கத் தாளமும் பின்னணி இசையும் போதுமானவை.

58.5 அணிசேர் இசைக்கருவிகள் தவிர்க்கப்படல் வேண்டும்.

3. **புள்ளித்திட்டம்** : 100 புள்ளிகட்கு

| இல. | விடயம் | புள்ளி |
|---|---|---|
| i | ஆக்கம் | 10 |
| ii | தாளலயம் | 20 |
| iii | பாவம் | 20 |
| iv | அங்கசுத்தம் | 20 |
| v | இயல்பான ஆடல்முறை | 15 |
| vi | சமர்ப்பணம் | 10 |
| vii | நேரம் | 05 |
| **மொத்தம்** | | **100** |

## 59.0 போட்டி இலக்கம் : 40 நடனம் - தனி

**மூன்றாம் பிரிவு : தரங்கள் 08, 09**

1. **விடயம் : (இணைப்பினைப்பார்க்கவும்)**
2. **நேரம் : 06-08 நிமிடங்கள்**

**பொதுவான விதிகள்**

59.1 இந்த நடனத்தில் அடவுகள், ஜதிகள், ஸ்வரக்கோவைகள், இடம்பெறலாம்.

59.2 நட்டுவாங்கத்தாளமும், பின்னணி இசையும் போதுமானவை.
59.3 அணிசேர் இசைக்கருவிகள் தவிர்க்கப்படல் வேண்டும்.

**3. புள்ளித்திட்டம் : 100 புள்ளிகட்கு**

| இல. | விடயம் | புள்ளி |
|---|---|---|
| i | தாளம், லயம் | 20 |
| ii | பாவம் | 10 |
| iii | அங்கசுத்தம் | 20 |
| iv | இயல்பான ஆடல்முறை | 20 |
| v | உருப்படியின் அமைப்புமுறை | 15 |
| vi | சமர்ப்பணம் | 10 |
| vii | நேரம் | 05 |
| மொத்தம் | | 100 |

## 60.0 போட்டி இலக்கம் : 41 நடனம் - தனி

**நான்காம் பிரிவு : தரங்கள் 10, 11**

**1. விடயம் : (இணைப்பினைப்பார்க்கவும்)**

**2. நேரம் : 06-08 நிமிடங்கள்**

**பொதுவான விதிகள்**

60.1 நட்டுவாங்கத்தாளமும், பின்னணி இசையும் போதுமானவை.

60.2 அணிசேர் இசைக்கருவிகள் தவிர்க்கப்படல்வேண்டும்.

**3. புள்ளித்திட்டம் : 100 புள்ளிகட்கு**

| இல. | விடயம் | புள்ளி |
|---|---|---|
| i | ஆக்கம் | 15 |
| ii | தாளம், லயம் | 20 |
| iii | பாவம் | 20 |
| iv | அங்கசுத்தம் | 15 |
| v | இயல்பான ஆடல்முறை | 15 |
| vi | சமர்ப்பணம் | 10 |
| vii | நேரம் | 05 |
| மொத்தம் | | 100 |

## 61.0 போட்டி இலக்கம் : 42 நடனம் - தனி

**ஐந்தாம் பிரிவு : தரங்கள் 12, 13**

**1. விடயம் :**

போட்டி நடைபெறும் இடத்தில் வழங்கப்படும் தலைப்பை மையமாகக் கொண்டு நடனத்தை ஆக்கம் செய்து சமர்ப்பித்தல் வேண்டும்.

**3. நேரம் :**

முன்னாயத்தம் செய்வதற்கு 15 நிமிடங்கள் வழங்கப்படும்.

அபிநயத்தல் 05 – 07 நிமிடங்கள்

**பொதுவான விதிகள்**

61.1 நட்டுவாங்கத்தாளமும், பின்னணி இசையும் (பொருத்தமான வாத்தியம்) கட்டாயம் இடம்பெறல் வேண்டும்.

**4. புள்ளித்திட்டம்** : 100 புள்ளிகட்கு

| இல. | விடயம் | புள்ளி |
|---|---|---|
| i | ஆக்கமும் நடன அமைப்பும் | 25 |
| ii | பாவம் | 20 |
| iii | தாளம், லயம் | 20 |
| iv | அங்கசுத்தம் | 20 |
| v | சமர்ப்பணம் | 10 |
| vi | நேரம் | 05 |
| **மொத்தம்** | | **100** |

## 62.0 போட்டி இலக்கம் : 43 நடனம் குழு 1

**பிரிவு : தரங்கள் 4, 5, 6, 7, 8, 9**

**1. விடயம் : (இணைப்பினைப்பார்க்கவும்)**

**2. நேரம் : 6 - 7 நிமிடங்கள்**

**3. புள்ளித்திட்டம் : 100 புள்ளிகட்கு**

| **இல.** | **விடயம்** | **புள்ளி** |
|---|---|---|
| i | ஆக்கம் | 20 |
| ii | தாளம், லயம் | 25 |
| iii | இயல்பான ஆடல்முறை | 15 |
| iv | ஒத்திசைவு | 15 |
| v | அங்க சுத்தம் | 10 |
| vi | சமர்ப்பணம் | 10 |
| vii | நேரம் | 05 |
| **மொத்தம்** | | **100** |

**சிறப்பு விதிகள் :**

62.1 மேலே குறிப்பிட்ட நடனத்திற்கு கிராமியப்பாங்கு பேணப்பட வேண்டும். சாஸ்திரிய முறையில் அமைந்த பரத அடவுகளோ, கதகளி சுவடுகளோ இடம்பெறுதல் தவிர்க்கப்படல் வேண்டும்.

62.2 அந்தந்த நடனத்தின் தன்மைக்கேற்ப நடன அமைப்பு இடம்பெறுதல் வேண்டும்

62.3 கிராமிய நடனங்களுக்கு டொல்கி, புல்லாங்குழல், ஹார்மோனியம், வயலின் பாவிக்கலாம்.

62.4 மேலைத்தேய வாத்தியங்கள் பாவித்தல் முற்றாகத் தவிர்க்கப் படல் வேண்டும்.

62.5 ஆசிரியரின் நட்டுவாங்கத்துடன் பாடகர் இருவர் உட்படப் பொருத்தமான வாத்தியங்கள் எவையேனும் இரண்டினோடு மொத்தமாக ஐந்து பேரிற்கு மேற்படாது இருத்தல் வேண்டும்.

62.6 கிராமிய நடனத்திற்கு பக்கவாத்தியங்கள் கட்டாயமாகப் பயன்படுத்தல் வேண்டும்.

## 63.0 போட்டி இலக்கம் : 44 நாட்டியநாடகம் (ஆடற்கதை)

**1. விடயம் : (இணைப்பினைப் பார்க்கவும்)**

**2. பிரிவு : திறந்த போட்டி**

**3. நேரம் : 18 - 20 நிமிடங்கள்**

**4. புள்ளித்திட்டம் :** 100 புள்ளிகட்கு

| இல. | விடயம் | புள்ளி |
|---|---|---|
| i | கதைத்தொகுப்பும் கருத்து வெளிப்பாடும் | 20 |
| ii | இயல்பான ஆடல்முறையும் பாத்திரவெளிப்பாடும் | 25 |
| iii | லயப்போக்கு (தாளம், லயம்) | 15 |
| iv | ஆக்கம் | 15 |
| v | ஓத்திசைவு | 10 |
| vi | சமர்ப்பணம் (பொது) | 10 |
| vii | நேரம் | 05 |
| **மொத்தம்** | | **100** |

**நாட்டிய நாடகத்திற்கான விதிகள் :**

63.1 தரப்பட்ட மகுடத்திற்குப் பொருத்தமாக ஆக்கம் அமைதல் வேண்டும். அதாவது கதையின், அதைச்சுற்றியுள்ள பாத்திரங்களின் ஆளுமைபற்றிய தெளிவு, பாத்திரங்களுக்கிடையேயான அறுபடாத தொடர்புகள், அதே நிலையில் பாத்திரங்கள் பெறுமான நிலைக்கு மிகைப்படாத கட்டுப்பாடு, அவற்றிற்கிடையிலான உப கருத்துப்பரிமாறல்கள், அவற்றின் சுயம் என்பன தொடர்புறு நிலையில் துல்லியப்படுத்தப்படல் வேண்டும்.

63.2 ஆக்கப்படும் நாட்டிய நாடகத்தின் (ஆடல் கதை) அமைப்பு பொறுப்பாளரின் சொந்த ஆக்கமாக அமைதல் வேண்டும்.

63.3 கதைக்குரிய வாச்சீக அபிநயம் (பாடல் வரிகள்) பல்லவி, அனுபல்லவி, சரணம் என்ற இசை உருப்படி நிலையினைத் தவிர்த்து, பாத்திரங்களின் கட்டுக்கோப்புத் தொடர்பான பாடல்வரிகளாக ஆக்கப்பட்டு உரிய இசைவடிவம் பெறுதல் வேண்டும்.

63.4 சந்தத்திற்கேற்ப வசன நடை வரிகளும் பொருத்தமான தெளிவான ஆங்கிக அபிநய வெளிப்பாடுகளும் உட்படுத்தப் படல் வேண்டும்.

63.5 நட்டுவாங்கம் செய்யும் ஒருவர் உட்பட கொட்டுவாத்தியம் ஒன்றும். இசைக்கருவி ஒன்றும், பாட்டுக்காரர் இருவருமாக மொத்தம் ஐந்து பேருக்கு மேற்படாமலும் அணிசேர் கலைஞர்கள் இடம்பெற வேண்டும். தேவையேற்படின் ஓகன் இசைக்கருவி பயன்படுத்தினால் மொத்தம் ஆறுபேராக இருக்கும். மாகாண, தேசிய மட்டப் போட்டிகளுக்கு அணிசேர் இசைக்கருவிகள் பயன்படுத்தப்படல் வேண்டும்.

63.6 மேடை, ஒப்பனை உதவிகளுக்கு 3 பேர் மட்டும் அனுமதிக் கப்படுவர்.

## 64.0 போட்டி இலக்கம் : 45 நாட்டார் பாடல்.

**1. விடயம் :**

அவ்வப்பிரதேசத்தில் வழங்கி வரக்கூடிய அல்லது தேடித் தொகுக்கக்கூடிய நாட்டார் பாடல்களைச் சேகரித்து, நாட்டார் பாடலுக்கே உரித்தான ஓசையுடன் பாடுதல். மண்வளச் சொற்கள், பேச்சுமொழிகள் ஆகியவற்றின் இயல்பில் கூடிய கவனம் செலுத்தப்படல் வேண்டும்.

**2. பிரிவு : திறந்த போட்டி**

**3. நேரம்** : 10 நிமிடங்கள்

**பொது விதிகள்**

64.1 பாடல்கள், முன்னரோ, தற்போதோ பாடநூல்களிலோ, ஆசிரியர் கைந்நூல்களிலோ, ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டிகளிலோ வெளிவந்ததாக இருத்தல் கூடாது.

64.2 02- 06 பேர் கொண்ட குழுவினர் பாடுதல் வேண்டும்.

64.3 பொருத்தமான பாரம்பரிய தாள, வாத்திய, இசைக் கருவிகள் போட்டியாளர்களாலேயே இசைக்கப்படல் வேண்டும். இசைக்கருவிகளை வைத்து வாசிப்பதற்கு தளபாடங்களைப் பயன்படுத்த முடியாது.

64.4 தாள வாத்திய அதீதஒலிகளுக்குள் பாடல்களின் மொழி உச்சரிப்புத் தெளிவு அமுங்கிவிடாது பார்த்துக் கொள்ளல் வேண்டும். உடுக்கு, டோலக், டொல்கி, பறை, தப்பு, ஹார் மோனியம், சங்கு, சேமக்கலம், கொம்பு, புல்லாங்குழல், புத்தளிப்புக் கருவிகள் இவற்றில் பொருத்தமானவற்றினை மட்டும் பயன்படுத்தலாம்.

64.5 ஏற்ற ஒப்பனைக்கும் ஆடை அணிகளுக்கும் புள்ளிகள் உண்டு. நாட்டார் பாடல் நின்றும் இருந்தும் பாடலாம். **தாள வாத்திய ஓசை வெளிப்பாடுகளின் ஊடாக கருப் பொருளின் பின்புலம் வெளிப்படுத்தப்படல் வேண்டும்.**

64.6 அபிநயங்களும், ஆட்டங்களும் தேவையானவிடத்துச் செய்து கொள்ளல் வேண்டும். அபிநயங்களும் ஆட்டமும் **கிராமிய நடனமாக அமைதல்** கூடாது.

64.7 **மேடை பின்னணி அலங்காரங்கள்,உபகரணங்கள், பொருட்கள்,காட்சிப்படுத்தல்கள் யாவும் முற்றாகத் தவிர்க்கப்படல் வேண்டும்.**

4. **புள்ளித்திட்டம்** : 100 புள்ளிகள்.

| **இல.** | **விடயம்** | **புள்ளி** |
|---|---|---|
| i | இயல்பான மொழி நடை | 20 |
| ii | இயைபான ஓசை | 20 |
| iii | பொருத்தமான தாள வாத்திய இசையும் காட்சி வெளிப்பாடும் | 20 |
| iv | பொருளுக்கேற்ப உணர்ச்சி வெளிப்பாடு | 15 |
| v | அபிநயம், ஆட்டம் | 10 |
| vi | ஒப்பனை ஆடை அணிகள் | 10 |
| vii | நேரம் | 05 |
| **மொத்தம்** | | **100** |

## 65.0 போட்டி இலக்கம் : 46 இலக்கிய நாடகம்.

1. **விடயம் : (இணைப்பினைப் பார்க்கவும்)**
2. **பிரிவு : திறந்த போட்டி**
3. **நேரம் : 30 நிமிடங்கள்**

**பொதுவான விதிமுறைகள்**

65.1 தலைப்புக்கேற்ற கதையம்சமும், கலையம்சமும் கொண்டிருத்தல்.

65.2 வெறும் குறியீடுகளை மட்டும் கொண்டிராமல் சாதாரண மக்களாலும் விளங்கிக்கொள்ளக் கூடிய ஜனரஞ்சகத் தெளிவுடன் இலக்கியத் தரமும் பேணப்படல் வேண்டும்.

65.3 வேறு நாடகங்களின் தழுவலாகவோ, பிரதிபண்ணலாகவோ இல்லாது புதிதாக ஆக்கப்பட்ட நாடகக் கதையாக இருத்தல் வேண்டும்.

65.4 அரசியல், சமய, சமூகரீதியாக எந்தவொரு தாக்கத்தினையும் எவரொருவருக்கும் ஏற்படுத்தாதவகையில் நாடகப் பிரதி அமைதல் வேண்டும். **இவ்விதி கண்டிப்பானது.** மீறப்படின் சம்பந்தப்பட்டவர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கையெடுக்க வேண்டிய நிலையும் ஏற்படும்.

65.5 பின்னணிக் குரல்கள் போட்டியாளர்களுடையதாகவே இருத்தல் வேண்டும்.

65.6 பொருத்தமான உத்திகளைக் கையாளுதல் வேண்டும்.

65.7 நாடகத்திற்கான இசைக்கருவிகளின் பயன்பாட்டிற்குக் கட்டுப் பாடுகள் ஏதும் கிடையாது. எனினும் அவற்றை இசைப்போர் அதே பாடசாலையைச் சேர்ந்த ஆசிரியராகவோ, மாணவ ராகவோ மாத்திரம் இருக்கமுடியும்.

65.8 ஒலிநாடாக்கள், மற்றும் இறுவட்டுக்கள் பயன்படுத்தல் கூடாது.

65.9 சினிமாப் பாடல்களோ, சினிமாப் பாடல் மெட்டுக்களோ பயன்படுத்தலாகாது.

65.10 ஆரம்பக் காட்சியமைப்பை மேடையில் ஒழுங்கமைக்க 10 நிமிடங்கள் மாத்திரம் வழங்கப்படும். மேலதிக நிமிடம் ஒவ்வொன்றிற்கும் ஒரு புள்ளி வீதம் கட்டொழுங்கிற்கான புள்ளியிலிருந்து கழிக்கப்படும்.

65.11 ஆற்றுகைக்கான நேரவிலகல் ஒரு நிமிடம் ஆகும். மேலதிக ஒவ்வொரு நிமிட நேர விலகலுக்கும் மொத்தப் புள்ளி களிலிருந்து ஒரு புள்ளி வீதம் கழிக்கப்பெறும். **27 நிமிடங் களுக்கு உட்பட்டதும், 33 நிமிடங்களுக்கு மேற்பட்டதுமான நாடகங்கள் நிராகரிக்கப்படும்.**

65.12 நாடகத்திற்கான கோரஸ் (பாடகர் குழு) இற்காக, தேவைப்படின் நடிகர் எண்ணிக்கைக்கு மேலதிகமாக இரண்டு மாணவர் களைப் பயன்படுத்திக் கொள்ள முடியும். கோரஸ் மற்றும் பக்கவாத்தியம் இசைப்போர் மேடைக்கு பக்கப்புறமாக நடுவர்களாற் பார்க்கத்தக்கதாக நிறுத்தப்படல் வேண்டும். **அவர்கள் சான்றிதழ் பெறும் உரித்துடையவர்கள் அல்லர்**.

65.13 நாடக ஆரம்பத்திற் திறக்கப்படும் திரை, நாடகம் நிறைவுறும் போதே மூடப்பெறுதல் வேண்டும்.

65.14 நாடகப் பொறுப்பாசிரியர் அன்றேல் நெறியாளருடன் மேலும் இருவர் உதவியாளராக நடிப்பிற்கு வெளியில் நின்று தொழிற்பட முடியும். நாடகம் ஆரம்பித்தபின்னர் உதவியாளர்கள் நடிப்பிடத்தினுட் பிரவேசிக்க இயலாது.

65.15 கொச்சையான மொழிப்பிரயோகம், சினிமாப் பாணியிலான சித்திரிப்பு என்பன தவிர்க்கப்பெறல் வேண்டும்.

**4. புள்ளித்திட்டம் :**

| இல. | விடயம் | புள்ளி |
|---|---|---|
| i | நாடக ஆக்கம் | 20 |
| ii | மேடை அமைப்பு | 05 |
| iii | உடையலங்காரம், ஒப்பனை | 10 |
| iv | கலைத்துவச் செழுமை | 15 |
| v | உணர்ச்சி வெளிப்பாடு | 10 |
| vi | நடிப்புத்திறன் | 20 |
| vii | பாத்திரப் பொருத்தம் | 10 |
| viii | உத்திகள் | 10 |
| **மொத்தம்** | | **100** |

## 66.0 போட்டி இலக்கம் : 47 வில்லுப்பாட்டு

**1. விடயம் : (இணைப்பினைப்பார்க்கவும்)**

**2. பிரிவு : திறந்த போட்டி**

**3. நேரம் : 20 நிமிடங்கள்**

**விளக்கக்குறிப்புகள் :**

**66.1 வில் :**

66.1.1 வில்லின் நீளம் அண்ணளவாக 3 மீற்றர் கொண்டது.

66.1.2 வில்லின் நாணிலும் கீழ்த்தண்டிலும் ஆங்காங்கே சதங்கைகள் கட்டப்பட்டிருத்தல் வேண்டும்.

**66.2 கதை சொல்லலும் பாட்டும் :**

66.2.1 கதை சொல்லும் பாங்கிற்கும் உரையாடற் பாங்கிற்கும் வேறுபாடு தென்படக்கூடியவாறு ஓசை அமைதல் வேண்டும்.

66.2.2 சமயம் சம்பந்தமான கருப்பொருள் கதையாக இடம் பெறக்கூடாது.

66.2.3 சினிமாப் பாடல்களோ, சினிமாப் பாடல் மெட்டுக் களோ இடம்பெறல் கூடாது.

**66.3 அமைப்பு**

66.3.1 காப்பு, அவையடக்கம், கதை அறிமுகம் என்பவற்றுடன் கதை நிகழ்விட விவரணம் (கற்பனையாயினும்) கதாபாத்திர முன்னுரை என்பன சீராக அமைந்து, கருவின் தன்மை தெளிவாகப் புலப்படும்படி போதனை யுடன் நிகழ்ச்சி அமையவேண்டும்.

**66.4 வில்லுப்பாட்டுக் குழு**

66.4.1 வாத்தியக்கருவிகள் வாசிப்பவர் உட்பட ஏழுபேர் மாத்திரம் இடம்பெறுவர். அனைவரும் அதே பாடசாலை மாணவர்களாகவே இருப்பர்.

66.4.2 பிரதான பாடகர் (குரு) கதையைச்சொல்லி, வில்லில் அடித்து இசைத்துப்பாடுதல் வேண்டும். இவரே வில்லுப்பாட்டின் நாயகன் ஆவார்.

66.4.3 பக்கப்பாட்டும் பக்கவுரையும் நகைச்சுவை நயங்களும் இருவரால் மட்டும் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். இச்செயற்பாடுகளும் பிரதான கருவையே தழுவி அமைதல் வேண்டும்.

66.4.4 ஏனைய நால்வருள் ஒருவர் விற்கடம் வாசிப்பார். இன்னொருவர் தோற்கருவியினை முழக்குவார். மற்றுமொருவர் ஹர்மோனியத்தை வாசிப்பார். ஹார்மோனியம் இல்லாதவிடத்துச் சுருதிப்பெட்டியால் சுருதியை வாசிப்பார். நான்காமவர் உடுக்கு என்னும் கருவியை அடிப்பர். இங்கு தரப்பட்ட கருவிகள் மட்டுமே பயன்படுத்தப்படல் வேண்டும்.

66.4.5 ஒரே சீராக ஆடி அசைதல் தவிர்க்கப்பட்டுள்ளது.

**66.5 பக்க வாத்தியங்கள்**

66.5.1 (i) விற்கடம் (வில்லுடன் இணைத்துக் கட்டப் பட்டிருத்தல் வேண்டும்.)

(ii) ஹார்மோனியம்

(iii) உடுக்கு

**பின்வரும் நான்கு தோற்கருவிகளுள் ஒன்று**

66.5.2 (i) மிருதங்கம்

(ii) தபேலா

(iii) டோல்கி

(iv) டோலக்

66.5.3 வில்லுப்பாட்டு நிகழ்ச்சிகளுக்கு போட்டியாளரே பக்க வாத்தியங்களையும் இசைத்தல் வேண்டும்.

**66.6 ஆடை அலங்காரம்**

66.6.1 பொருத்தமான ஆடை அலங்காரங்கள் ஒரே சீராக இருத்தல் வேண்டும். எனினும் வீணான ஆடம்பர ஆடை அணிகள் தவிர்க்கப்படல் வேண்டும்.

66.6.2 வில்லுப்பாட்டில் வேட உடைதரித்தலாகாது. ஆண், பெண் பாலினர் தத்தம் கலாசார உடைகளில் பங்கேற்க வேண்டும்.

3. **புள்ளித்திட்டம்** : 100 புள்ளிகட்கு

| **இல.** | **விடயம்** | **புள்ளி** |
|---|---|---|
| i | நடையும் இசையும் | 20 |
| ii | ஆக்கமும் நயமும் | 30 |
| iii | பக்கப்பாட்டு,வினாக்கள், நகைச்சுவை | 15 |
| iv | உணர்ச்சி வெளிப்பாடு | 15 |
| v | அபிநய பாவங்கள் | 10 |
| vi | ஆடை அலங்காரம் | 05 |
| vii | நேரம் | 05 |
| **மொத்தம்** | | **100** |

## 67.0 போட்டி இலக்கம் : 48 விவாதம்.

1. **விடயம் :**

தமிழிலக்கியம், இலக்கணம் சம்பந்தமான விடயங்களிலிருந்து நடுவர்களால் தெரிவு செய்து தரப்படும் தலைப்பு ஒன்றினை

ஒட்டியும் வெட்டியும் விவாதித்தல் வேண்டும். தமிழிலக்கியத்தில் காணப்படும் பாத்திரங்கள், பண்புகள், விழுமியங்கள், போர்கள், பக்தி, காதல், மானிடநேயக்கருத்துக்கள் முதலிய பல விடயங்களில் மாணவர்களின் தேடல்கள் அமைதல் வேண்டும். அதே போன்று இலக்கணத்தின் இன்றியமையாமை இலக்கியமும் இலக்கணமும் இலக்கணத்தின் குறிப்பான சிலவிடயங்கள், தலைப்புகள் பற்றியெல்லாம் மொழித்திறனோடு ஒட்டி விவாதிக்கும் திறன் பெற்றிருத்தல் வேண்டும். அத்தோடு நவீன ஊடகங்களும் மொழியும், பண்பாடும், கலாசாரமும் கணினியின் பயன்பாடுகள், அறிவியற்றமிழ் என்ற விடயங்களும் சேர்த்துக் கொள்ளப்படலாம்.

**2. பிரிவு : திறந்த போட்டி**

**3. நேரம் : 30 நிமிடங்கள்**

**பொது விதிகள்**

67.1 தலைப்புக்குட்பட்டே விவாதம் அமைதல் வேண்டும்.

67.2 ஒரு குழுவில் மூவர் மாத்திரம் கலந்துகொள்ள வேண்டும்.

67.3 சமயம், மொழி, இனம், அரசியல் முதலியவற்றில் விரும்பத்தகாத பாதிப்புகள் ஏற்படாத பாங்கில் விவாதம் அமைதல் வேண்டும். போட்டி நடைபெறும் பொழுது எதிரணியினருக்குத் தொந்தரவு செய்யாதிருத்தல் வேண்டும்.

67.4 சமய, சமூக, பால்நிலை ரீதிகளில் எதிரணியினரின் விவாதத் திறனைக் குறைப்பதற்கான முயற்சிகள் தவிர்க்கப்பட வேண்டும். மீறும் பட்சத்தில் புள்ளிகள் குறைக்கப்படவோ, போட்டியிலிருந்து நீக்கப்படவோ முடியும்.

67.5 போட்டியின் ஆரம்பத்தில் குழுத் தலைவராகச் செயற்படுபவரே, போட்டிச் சுற்றுக்கள் முடியும் தலைவராகச் செயற்படுதல் வேண்டும். இடைநடுவில் தலைவரை மாற்றுதல் முடியாது.

67.6 போட்டியில் பங்கு கொள்ளும் எந்தவொரு அணியும், ஒரு போட்டிச் சுற்றில் பங்குகொண்டு வெற்றியீட்டி, அடுத்தச் சுற்றுக்கு தெரிவாகியுள்ள சந்தர்ப்பம் ஒன்றில், அச்சுற்றில் பங்குகொள்ளாது இடைவிலகிச் செல்லமுடியாது.

**4. புள்ளித்திட்டம் :** 100 புள்ளிகட்கு

| **இல.** | **விடயம்** | **புள்ளி** |
|---|---|---|
| i | பொருள் | 30 |
| ii | பேச்சுவன்மை | 20 |
| iii | சமயோசிதமான வாதத்திறன் | 25 |
| iv | குழுவொருமைப்பாடு | 15 |
| v | நேரத்துக்குள் விடய அடக்கம் | 05 |
| vi | நிலை | 05 |
| **மொத்தம்** | | **100** |

## 68.0 போட்டி இலக்கம் : 49 தமிழறிவு வினாவிடை

**1. விடயம் :**

சங்க காலம் தொட்டு இக்காலம் வரையான தமிழிலக்கிய, இலக்கணங்களில், பரவலான அறிவினைப் பரிசோதிக்கும் பாங்கில், தமிழறிவு வினாவிடைப் போட்டி இடம்பெறும். அத்தோடு தமிழ்மொழி, தமிழிலக்கியம், தமிழிலக்கணம் ஆகியவற்றின் இயல்புகள், சிறப்புகள், பண்புகள், தமிழ்க்கலைச் சொல்லாக்கம் தழுவியதாகவும் வினாக்கள் அமையும். நவீன தொடர்பு சாதன ஊடகங்கள், புலம்பெயர்வு ஆகியன தமிழ் மொழி, பண்பாடு முதலியவற்றில் ஏற்படுத்திய தாக்கங்கள் பற்றிய அறிவைப் பரிசோதிப்பதாகவும் வினாக்கள் அமையும்.

**2. பிரிவு : திறந்த போட்டி**

**பொது விதிகள்**

**(அ) நேர அமைப்பும் புள்ளித் திட்டமும்**

68.1 போட்டிகளுக்காகத் தெரிவு செய்யப்படும் இருகுழுக்களில், முதல் தெரிவு செய்யப்பட்ட குழுவில் விடையளிக்கத் தெரிவு செய்யப்பட்டவரிடம் வினாவப்பட்ட வினாவுக்கு விடையளிப்பதற்குக் கொடுக்கப்படும் நேரம் 15 வினாடிகள் மாத்திரம். புள்ளிகள் 10.

68.2 அவர் விடையளிக்காவிடின் அவரது குழுவிலுள்ள ஒருவர் பதிலளிக்கலாம். கொடுக்கப்படும் நேரம் 10 வினாடிகள் மாத்திரம். புள்ளிகள் 05.

68.3 இக்குழு பதிலளிக்கத் தவறும் பட்சத்தில் மற்றைய குழுவிற்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும். பதிலளிப் பதற்குக் கொடுக்கப்படும் நேரம் 05 வினாடிகள் மாத்திரம். புள்ளிகள் 05.

68.4 இரு குழுவினராலும் பதிலளிக்க முடியாவிடின் நடுவர்கள் பதிலைக் கூறிவிட்டுப் போட்டியைத் தொடர்ந்து நடாத்துவர். இவ்விதமாக, இரு குழுக்களுக்கிடையே போட்டிகள் நடக்கும். அதிகப்படியான புள்ளிகள் பெற்ற குழு வெற்றி பெறும்.

68.5 ஒரு போட்டி மூன்று சுற்றுக்களைக் கொண்டதாக அமைதல் வேண்டும். மூன்று சுற்றுக்களின் முடிவில் போட்டிக் குழுக்கள் சம புள்ளிகள் பெறுமிடத்து மேலும் அனைத்து மாணவர்களுக்கும் ஒரு சந்தர்ப்பம் வழங்குதல் வேண்டும். அச் சந்தர்ப்பத்திலும் முடிவுகள் தீர்மானிக்கப்படாத விடத்து மேலும் இறுதியாக ஒரு சந்தர்ப்பத்தினை வழங்கி, அதிலும் சம புள்ளிகள் பெற்றால், **திருவுளச்சீட்டு** மூலம் வெற்றி தீர்மானிக்கப் படும்.

### (ஆ) சுற்றுக்களும் வினாக்களும்

68.6 ஒரு போட்டி பின்வரும் மூன்று சுற்றுக்களைக் கொண்டு அமையும்

- முதல் சுற்று – தமிழக இலக்கிய வரலாற்று இலக்கியப் பகுதிகளைக் கொண்ட வினாக்கள்
- இரண்டாம் சுற்று – ஈழத்துஇலக்கிய வரலாற்று இலக்கிய பகுதிகளைக் கொண்ட வினாக்கள்
- மூன்றாம் சுற்று – இலக்கண வினாக்கள்

68.7 வினாக்கள் முற்றிலும் தமிழறிவைப் பரீட்சிப்பதாகவே அமைதல் வேண்டும்.

68.8 வினாக்கள் வெகுசுட்டிப்பானவையாகவும், தெளிவாகவும், விளக்கம் உடையனவாகவும், சுருக்க விடைகள் தரக் கூடியனவாகவும் இருத்தல் வேண்டும்.

68.9 வினாவப்படும் வினாக்கள் ஒரு சொல்லில் அல்லது சுருக்கமான ஒரு வசனத்தில் பதில் தரக்கூடியனவாக இருத்தல் வேண்டும். வினாக்கள் இலக்கங்கள் இட்டுத் தயாரிக்கப்பட்டு, அவ்விலக்கங்கள் ஒவ்வொன் றையும் சீட்டில் எழுதிப் போட்டியாளர்களை எடுக்கச் சொல்லி அவ்விலக்கத்திற்குரிய வினா கேட்கப்படல் வேண்டும்.

## 69.0 போட்டி இலக்கம் : 50 முஸ்லிம் நிகழ்ச்சி

**1. விடயம் :**

சமூகப்பெறுமதிமிக்க செய்தி ஒன்றை வெளிக்கொணரும் வகையில் பின்வரும் விடயப்பரப்புகளுள் ஏதாவது ஒன்றை மையமாகக் கொண்டு நிகழ்த்தப்படல் வேண்டும்.

**(இணைப்பினைப் பார்க்கவும்)**

**2. பிரிவு : திறந்த போட்டி**

**3. நேரம் : 15 - 20 நிமிடங்கள்**

**பொது விதிகள்**

69.1 பங்குபற்றுவோர் எண்ணிக்கை 06 - 08 பேர் வரை

69.2 இஸ்லாமிய மாணவர்கள் போதாதவிடத்து பாடசாலை யிலுள்ள தமிழ் மாணவர்களும் பங்கு கொள்ள முடியும். எனினும் முஸ்லிம் மாணவர்களுக்கே முன்னுரிமை வழங்கப்படல் வேண்டும்.

69.3 பிரதிகள் இப்போட்டிக்காக இயற்றப்பட்டதாக அமைதல் வேண்டும்.

69.4 முன்வைக்கப்படும் விடயம் அனைவருக்கும் விளங்கக் கூடிய வகையில் தெளிவாக அமைய வேண்டும்.

69.5 தமிழ்மொழி வளர்ச்சிக்குப் பங்களிப்புச் செய்த இஸ்லாமியத் தமிழ் இலக்கியங்களில் இருந்தே விடயப்பரப்புக்கள் பெறப்படல் வேண்டும். சமயம் சார்ந்த கருத்துக்கள் எவையும் இடம்பெறக் கூடாது.

69.6 இஸ்லாமிய கலாசார பண்பாட்டு ஆடை அணிகள் பயன் படுத்தப்படலாம்.

**4. புள்ளித்திட்டம் :** இணைப்பினைப் பார்க்கவும்.

**70.0 கீழே தரப்பட்டுள்ள தமிழ்மொழித்தின வாழ்த்துப் பாவினை போட்டிகளின் போதும், தமிழ் மொழித்தின விழாக்களின் போதும் சகல மட்டங்களிலும் இசைத்தல் வேண்டும்.**

**தமிழ் மொழித்தின வாழ்த்து**

வாழ்க தமிழ்த்தினம் வளர்க தமிழ்த்தினம்
வாழிய வாழியவே!
மாண்புறு முத்தமிழ் வித்தகரின் நினை
வாம் தினம் வாழியவே!

இலங்கையில் மாணவர் வளங்கொள் தமிழ்ப்பயிர்
இமயமெனப் பொலிய
ஏற்புறு முத்தமிழ் போட்டி பண்பாட்டின்
எழுச்சிக்கு வித்திடவே.

சங்கத் திருப்பினில் பங்கமி லாதிருந்
தாண்ட தமிழ் மொழியே
சால்புயர் கல்வித் தமிழ்மொழிப் பிரிவுயர்
தகைமைக்கு வித்திடவே.

இந்து கிறிஸ்தவம் பௌத்தமிஸ் லாம்நெறி
ஏற்றம் மிகுந்த தமிழ்
எம்முன்னே தேசிய ஒற்றுமை நிலைபெறும்
எழில்தினம் வாழியவே!

-திமிலைத்துமிலன்-

சுனில் ஹெட்டிஆரச்சி,
செயலாளர்,
கல்வி அமைச்சு.

கல்வி அமைச்சு,
“இசுறுபாய”
பத்தரமுல்லை.
2018.10.11